செந்தமிழ்

தொகுதி 87 செப்டம்பர் 93 பகுதி 3

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

நா. பாலுசாமி எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி., பி.எட்.

பொருளடக்கம்

1. வள்ளுவர் பார்வையில் பெண்கள் 1
க.சி. அகமுடைநம்பி பி.இ.,எம்.ஏ., மதுரை

2. வித்துவசிரோமணி சி. கணேசையர் 7
பேரறிஞர் அ.மா. பரிமணம், தஞ்சை

3. குறளின் குரல் 23
பேரறிஞர் க. சின்னப்பா, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

4. வெந்துயர் தீர்க்கும் வெண்ணீறு 25
பேரறிஞர் பெ. சுப்பிரமணியன்

5. வள்ளலார் படைத்த திருமுகங்கள் 30
பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை, தஞ்சை

6. நீர்வார் கண்ணார் 35
கன்னக்குறிச்சி புலவர் வை. தங்கமணி

7. நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களும்
இளைஞர் இலக்கியமும் 38
ஜி. வசந்தா, தஞ்சை

வள்ளுவர் பார்வையில் பெண்கள்

— க.சி. அகமுடைநம்பி பி.இ., எம்.ஏ.

திருவள்ளுவர் பெண்களை ஆண்களுக்கு இணையாகக் கருதவில்லை என்றும், பெண்களைச் சிறுமைப்படுத்துவதாகவே திருக்குறள் அமைந்துள்ளது என்றும் சிலர் கருதுகின்றனர். முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர், பெண்களைப் பற்றிய சில குறட்பாக்களைத் திருக்குறளிலிருந்து அகற்றி விட வேண்டுமென்றும் கூறத் துணிந்துவிட்டனர். இவர்கள் கூறுவது உண்மையா என்று ஆய்ந்து பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையே சிறந்த உரை என்று அண்மைக் காலம் வரை தமிழறிஞர்கள் கருதி வந்தனர். ஆனால், சில குறள்களுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை தவறானது என்று தமிழறிஞர் சிலர் கருதுகின்றனர். எடுத்துக் காட்டாக, "மக்கட்பேறு" அதிகாரத்தில் பரிமேலழகர் உரை தரும் சில குறிப்புகள் பெண்ணைத் தாழ்த்துவனவாக உள்ளன, ஆயினும், அவை உரையாசிரியர் காலத்தின் கருத்தோட்டத்தைப் புலப்படுத்துமேயன்றி வள்ளுவர் கருத்து ஆகா என்று விளக்கமளிக்கின்றனர் ஒருசார் அறிஞர்.

பரிமேலழகர் உரையை மட்டிலும் படித்து அமைந்து விடாமல் அண்மையில் வெளியாகியுள்ள பிற அறிஞர்களின் உரைகளையும் படித்துணர்தல் பயன் விளைக்கும்.

'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்கள் குடும்ப வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பவள் கணவனைவிட மனைவியே என்பதை வலியுத்துவனவாகும். கணவன் மாண்புடையவனாக இல்லாவிட்டாலும் குடும்ப வாழ்வு அவ்வளவாகச் சீர் குலைவதில்லை. ஆனால், மனைவி மாண்புடையவளாக இல்லையென்றால், அந்தக் குடும்பத்தில் வேறு என்னதான் சிறப்புச் சேர்ந்திருப்பினும் குடும்ப நலம் சிறக்காது. இந்த வாழ்வியல் உண்மை அன்றும் இன்றும் என்றும் மாறாதது. இதைத்தான், "இல்லதென் இல்லவள்

மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை" என்று வள்ளுவர் சுட்டுகிறார்.

இல்லறத்துக்கேற்ற நற்குண நற்செய்கைகளையுடைய வளாகவும், தன்னைக் கொண்ட கணவனின் வருவாய்க்கு ஏற்பக் குடும்பச் செலவுகளைக் கையாள்பவளாகவும் உள்ள பெண்ணே சிறந்த வாழ்க்கைத் துணையாவாள் என்று குறள் கூறுகிறது. 'தன்னைக் கொண்டவன்'என்றிருப்பது பெண்ணை இழிவுபடுத்துவதாக உள்ளது என்றும், மனித மதிப்புக்கு எதிரானது என்றும் எதிர்க் கருத்தினர் கருதுகின்றனர். மணவாழ்வில் ஒருவனுடன் ஒருத்தி இணைந்ததை, அவள் 'அவனுக்கு வாழ்க்கைப் பட்டாள்' என்று கூறுவது இக்கால வழக்கு. இதையும் மனித மதிப்புக்கு மாறானது என்று சொல்லிவிடலாமா? காலத்துக்கேற்பச் சொற்கள் ஆளப்படுகின்றன. அவன் அவளை விரும்பிக் காதலித்தான்—கைத்தலம் பற்றினான்—என்று சொல்வதையெல்லாம் கூட இந்த மாற்றுக் கருத்தாளர்கள் குறை கூறவே செய்வர் போலும்!

இனி வள்ளுவத்தைக் குறை கூறுவோர் மனத்தைப் பெரிதும் உறுத்துவது பின்வரும் குறள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை".

இந்தக் குறளில் தெய்வம் தொழாஅள் என்பதனைக் கடவுள் வழிபாட்டை மறுத்துரைப்பதாகப் பொருள் கொள்வது பிழையாகும்; அதுபோலவே, 'கொழுநன் தொழுதெழுவாள்' என்பது பெண்ணைத் தாழ்த்திப் பேசும் கூற்று என்பதும் தவறாகும்; இரண்டு தொடர்களும் பெண்ணின் கற்பு நிலையைக் குறிப்பனவாகும் என்று விளக்குவர் சில அறிஞர்?. கவிஞர்களுக்கே உரிய கவித்துவப் படிமங்களை அதே முறையில் புரிந்துகொள்ள முற்படவேண்டும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற குறளை எடுத்துக் கொண்டு. எந்த மனிதனும் எந்த நிலையிலும் தெய்வமாக ஆகிவிட முடியாது என்றும்,ஆகவே பொய்ம்மைக்கு இட்டுச் செல்லும் இதுபோன்ற குறள்களை திருக்குறள் நூலிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்றும் கூறினால், அது சரியாகுமா?

மனித மனத்தின் ஆற்றல் குறித்து உளவியல் அறிஞர்கள் கூறுவதை இவண் கருதிப் பார்க்கலாம். மனத்தை ஒருமுகப்

படுத்தியுள்ள சிலருடைய மன ஆற்றல், இயல்பான மனித எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருப்பதையும், யோகியர்தம் மன ஆற்றல் மழையையும் வருவிக்க வல்லதே என்பதையும் உளவியல் அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். கற்புநெறி என்பது ஒரு யோக நெறியே. சிறிது உயர்வு — நவிற்சியுடன் கூடியது இக் குறள் என்று வேண்டுமானால் கூறலாமேயன்றி இது சாத்தியமே இல்லை என்று கூறிவிட முடியாது. மக்கள் நெரிசல் அதிகமாகிவிட்ட இன்றைய ஆரவார உலகில் இத்தகு கற்புநிலை சாத்தியமில்லை என்று வைத்துக் கொண்டு, அந்தக் கற்புநிலை பற்றிப் பேசுவதே தவறு என்று கூறலாமா? இன்றைய அதிகார— அரசியல் உலகில் அப்பழுக்கற்ற நேர்மை என்பது காணக் கிடைக்காத அரிய குணம் என்பதால் நேர்மை பற்றிப் பேசுவதே தவறு என்றாகிவிடுமா? 'தொழுதல்' என்பதற்கு நினைவில் வைத்துப் போற்றுதல் அல்லது பின்பற்றுதல் என்ற பொருளைத் தான் எடுத்துக் கொள்ளவேண்டும். குடும்பத் தலைவனின் நினைவு போற்றி எழுபவள் என்பதே உரிய பொருள்.

அடுத்து, 'கற்பு' நெறியைப் பெண்களுக்கு மட்டுமே சுமத்துகிறது குறள் என்பது எதிர்க்கருத்தாளர்களின் இன்னொரு முக்கிய குற்றச்சாட்டாகும். கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெற்ற பெண்ணைவிட பெருமைக்குரியது வேறெதுவும் இல்லை என்பது வள்ளுவம். இந்தத் திண்மையுடைய ஒரு பெண்ணுக்குக் கிடைக்கின்ற சமூக மதிப்பையும் அந்தத் திண்மையைப் பெறாத பெண்ணுக்கு சமூக மதிப்பு இல்லாமல் ஆகிவிடுவதையும் அன்றாட நடைமுறையில் காண்கிறோம். கற்பென்னும் திண்மையைப் பெண்களுக்கு அறிவுறுத்துகின்ற வள்ளுவர். 'பிறன் மனை நோக்காத பேராண்மை'யை ஆண்களுக்குச் சுட்டிக் காண்பிக் கிறா . அயலான் மனைவியை விரும்பலாகாது என்று மட்டும் அவர் கூறி அமையவில்லை. அயலான் மனைவியை விரும்பிப் பார்க்கவே கூடாது என்ற வழிமுறையைக் கடைப் பிடிப்பவனின் ஆண்மையே 'பேராண்மை' என்று சிறப்பித்துக் கூறுவதை ஆழமாகக் கருதிப் பார்க்கவேண்டும்.

'கற்பு' என்ற சொல்லைப் பெண்களுக்கு மட்டும்தானே வள்ளுவர் பயன்படுத்துகிறார் என்று அவர்கள் கேட்கலாம். பெண்களுக்கு மட்டுமே பயன்படுத்தக்கூடிய சொற்கள் இது போல் இன்னும் பல உள்ளன. 'பெண்மை' என்ற சொல்லைப் பெண்களுக்கு மட்டுமே பயன்படுத்துகிறோம். ஆண்மை கலவாத

பெண்மை இல்லை, பெண்மை கலவாத ஆண்மை இல்லை. என்றாலும் கூட ஆண்மையை ஆணுக்கும் பெண்மையைப் பெண்ணுக்கும் என்றே வகைப்படுத்துகிறோம். 'Chaste, Virgin' போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் பெண்களுக்கு மட்டுமே உரியவை. ஆகவே, 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டும் தானா என்று யாரும் வருத்தப்படத் தேவையில்லை. பெண்மைச் செறிவைக் கற்பு என்கிறோம். ஆண்மைச் செறிவைப் 'பேராண்மை என்கிறோம். 'அறத்தின் எல்லைமீறி எத்தனை பாவங்களை ஒருவன் செய்ய நேர்ந்தாலும், பிறன் மனைவியை விரும்பாதிருத் தல் நல்லது' என்று ஆண்மையின் ஒருமையைப் பன்னிப் பன்னிக் கூறுகின்ற வள்ளுவரை, ஒரு பக்கக் கற்பு நெறி கூறும் பிற்போக் காளர் என்று கூற முற்படுவது அறியாமையே.

அடுத்து, 'பெண்வழிச் (செல்தல்) சேறல்' என்ற அதிகாரத் துக்கு வருவோம். காம இன்பம் காரணமாக ஓர் ஆண்மகன், மனைவியின் கைப்பாவை போலும் இருந்துகொண்டு, அவள் சொற்படியே இயங்குவதைக் கண்டிப்பதாகஇவ்வதிகாரம் அமைந் துள்ளது. பல குடும்பங்களில் ஆண்மக்கள் மனைவிமாரின் விருப்பங்களுக்கு இசைந்தே செயல்படுபவர்களாக இருப்பதைக் காண்கிறோம். அத்தகையோர் தம் புறக் கடமைகளில் கருத்துச் செலுத்துவதில்லை; விருந்தினரைத் தக்கவாறு ஓம்புவதில்லை. நண்பர்களுக்கு உதவுதல், பிற அறச் செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றையெல்லாம் அவர்களால் செய்யமுடிவதில்லை. இத்தகு மெய்ம்மைநிலையை வள்ளுவர் சுட்டிக் காட்டுவது எப்படித் தவறாகும்?

> பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
> பெண்ணே பெருமை யுடைத்து.

என்பது குறள். ஆண், ஆண்மை சிறக்க வாழ வேண்டும். பெண் பெண்மை நிறைந்து விளங்கவேண்டும். ஆண்மையில் குறைவு டைய ஆண்மகன் சமூகத்தில் எள்ளி நகையாடப்படுகிறான். ஆனால், பெண்மைக் குறைவுடைய பெண், சில வேளைகளில் 'வீராங்கனை' என்று போற்றவும் படுகிறாள். இத்னை மனித மதிப்பு என்றா கூறுவது? மனித மதிப்பின் முரண்பாடல்லவா இது?

எந்த ஒரு தனிமனிதனையும் இன்னொரு தனி மனிதனுக்குச் சமம் என்று கூறிவிட முடியாது. மெய்ம்மை நிலை இப்படி

யிருக்கும்போது, பெண் ஆணுக்குச் சமம் என்று கூறுவதோ, ஆண் பெண்ணுக்குச் சமம் என்று கூறுவதோ மெய்ம்மைக்குப் புறம்பானது. ஒன்று மெல்லினம். இன்னொன்று வல்லினம். எனினும், ஆண், பெண் இருபாலருக்கும் சம உரிமை என்பது இன்றைய உலகம் ஏற்றுக் கொண்ட ஒரு கோட்பாடு. இந்தக் கோட்பாட்டுக்கு வள்ளுவம் எதிரானதன்று.

ஆண், பெண் சம உரிமை என்பதைக் கூட ஒரு கணிதச் சமன்பாடு போலும் கணக்கிட்டுப் பார்க்கக் கூடாது. ஆணுக்கென்று சில தனி உரிமைகள், பெண்ணுக்கென்று சில சிறப்புரிமைகள் இருக்கவே செய்யும். ஒரு பெண், தன் பெண்மையைப் பொறுத்து முழு உரிமை பெற்றவளாதல் வேண்டும்; அதுபோல் ஆணுக்கும் முழு உரிமை வேண்டும்;

சில பெண்கள், தம் கணவன்மார் அன்புக்கும் ஆண்மைக்கும் கட்டுப்பட்டு அவர்தம் மகிழ்ச்சியே தம் மகிழ்ச்சியென்று கொண்டு, அவர்களோடு முழுமையாக ஒன்றித் தனித்த தன்மை என்று தம்மிடம் எதையும் பற்றிக் கொள்ளாமல் வாழ்வதைக் காணலாம். மற்றவர் பார்வைக்கு அத்தகு பெண்கள் தம் கணவருக்கு அடிமைகள் போல் ஆகிவிட்டதாகத் தோன்றக் கூடும். இங்கே, அந்தப் பெண்களின் உரிமை பறிக்கப்பட்டதாகக் கூறுவது தவறு.

இக்காலத்தைப் போல், வள்ளுவர் காலத்தில் பெண்கள் புறவாழ்வில் பங்கேற்கவில்லை. புற வாழ்வுக்கு ஆண்கள் மட்டுமே என்ற வாழ்வியல் நடைமுறை நிலவிய கால கட்டம் அது. பொது வாழ்வின் சிக்கல்களில் வன்முறை, சூது—வாது முதலியவற்றில் பெண்கள் ஈடுபட வேண்டிய தேவை அன்றில்லை. இந்த வரலாற்றுப் பார்வையோடு 'பெண்வழிச் சேறல்' என்ற அதிகாரத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

புறவாழ்விலும் பெண்கள் செயலாற்றத் தொடங்கியுள்ள இக்காலச் சூழலில் கூட, திருவள்ளுவர் பெண்களின் பொது வாழ்வு உரிமையை மறுப்பதாகக் கருத இடமே இல்லை. பெண்களின் இத்தகு உரிமை பற்றிக் கருத்துரைப்பதற்குரிய தேவை வள்ளுவர் காலத்தில் இல்லை. அதனால் இதுகுறித்த குறள்கள் திருக்குறளில் இடம் பெறவில்லை. இந்த இருபதாம் நூற்றாண்டில் மலர்ந்து வளர்ந்துள்ள குடிநாயகம்(ஜனநாயகம்) என்ற அரசியல்

அமைப்பு முறை திருக்குறளில் இடம் பெறவில்லையென்பதால், குடிநாயகத்துக்கு எதிரானது வள்ளுவம் என்று கூறலாமா?

கற்பு நெறி பெண்மையின் மதிப்பை வானளாவ உயர்த்து கிறது என்று சொன்ன வள்ளுவர், அந்தத் திண்மை மகளிர்தம் நிறையால் மட்டுமே கைகூடும் என்று திட்டவட்டமாகக் கூறு கிறார். "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?" என்று உரத்து ஒலிக்கின்ற வள்ளுவத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வோர் ஒருபோதும் திருவள்ளுவர் பெண்களைத் தாழ்த்துவதாகக் குறை காண மாட்டார்கள்.

"அறத்திலும், பொருளிலும், இன்பத்திலும் வாழ்க்கைத் துணையாவாள் பெண்ணே என்பது திருவள்ளுவரது முடிவு. பெண்கள் உயர்வதில்லை என்றும், பெண் பிறவியே இழிபிறவி என்றும் கூறுவாரது வாய்மொழி அனைத்தும் பொய்மொழி என்று பொய்யாமொழியார் காட்டுகின்றார்; புத்தேழுலகையும், செம் பொருளாய் நின்ற சிறப்பு நிலையாகிய நீத்தார் நிலையையும் பெண்கள் எளிதில் அடையலாம் எனப் பாடுகின்றார். பெண் பிறப்பில் இத்தகைய பெருமையினையும், உயர் நிலை அடைதற் கேற்ற அதன் தகுதியினையும் எடுத்துக் காட்டிப் பெண் பிறப் பினும் உயர்ந்த பிறப்பு உண்டோ என்கிறார். 'பெண்ணிற் பெருந் தக்க யாவுள' என்பதே திருவள்ளுவர் காண்கின்ற உண்மை. காலத்தையும் கடந்த திருவருட்புலவர் ஆதலின் உண்மையினை யும் உயர்நிலையினையும் உலகம் உள்ளளவும் போற்ற ஓதுகிறார் என்பதே உறுதி' என்பர் அறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

வித்துவ சிரோமணி சி. கணேசையர்

— பேரறிஞர் அ.மா. பரிமணம்

தோற்றுவாய்.

தமிழகம் என்றவுடன், அது இந்தியப் பெரு நாட்டின் தென் பக்கத்திலுள்ள வேங்கடம், குமரி ஆகியவற்றிற்கு இடைப் பட்ட நிலப்பகுதி என்னும் கருத்து தொல்காப்பியக் காலந் தொட்டே நிலவி வருகிறது என்பது 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்னும் அந்நூலின் பாயிரத் தால் அறியப்படுகின்றது. பின்னர்த் தோன்றிய நூல்களும், 'வேங்கடம் குமரி தீம் புனற் பௌவம்' என்றும் பிறவானும் அக் கருத்தையே கூறி வந்துள்ளன. ஈழத்துப் பூதன் தேவனார் என்னும் சங்கப் புலவர் பெயர் கொண்டு, இலங்கை எனப்படும் ஈழநாட்டினின்றும் தமிழ்ப்புலவர்கள் தமிழகம் போந்து, சங்கப் புலவர்களோடு ஒப்ப மதிக்கப் பெறும் பெருமை பெற்று விளங்கிய தனை அறியலாம். இலங்கையின் ஆட்சி மொழியாய் விளங்கும் சிங்கள மொழி, ஏறத்தாழ 1500 ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ் வடமொழி, பாகதம், பாலி ஆகிய இந்தியத் தொன்மொழிகளின் கலப்பினால் உருவாகியது என்று ஆய்வாளர் கூறுகின்றனர். மேலும், பண்டைக் காலத்தில் அங்கே வழங்கியது தமிழ் மொழியே என்றும் கூறுகின்றனர். இடைக்காலச் சோழ பாண்டி யர்கள் இலங்கை மன்னர்களொடு போர் புரிந்து சிலபோது தோற்றும் சிலபோது வென்றும் விளங்கியுள்ளதனைத் தமிழக வரலாறு, கல்வெட்டுச் சான்றுடன் காட்டுகின்றது. இவ்வாறி ருந்தும் ஈழத் தமிழ்த் தொடர்பு பற்றி, தாய்த் தமிழக வரலாறு உரிய அளவில் குறிப்பிடாதது ஆராய்தற்குரியது.

இந்தியா இலங்கை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆங்கில ஆட்சி யின் விளைவாக எழுந்த, தாயக மொழி-பண்பாட்டு மறுமலர்ச்சி யின் பயனாகத் தமிழகத் தமிழர்க்கும் இலங்கையிலுள்ள யாழ்ப் பாணத் தமிழர்க்கும் மொழி—சமயம்—பண்பாடு ஆகியவற்றில் நெருக்கமும் பிணைப்பும் மிகுதியாயின. தாய்த் தமிழகமும் யாழ்த் தமிழகமும் சிறிய கடற்பகுதியால் பிரிக்கப்பட்ட வெவ் வேறு நாடுகளாயினும், தாய்மொழியால், தமிழ் உணர்வால்

ஒன்றுபட்டு விளங்கியதனை உணரக்கூடும். இரு நாடுகளையும் இணைத்துக் காட்டிய இராமாயணச் சேது ஒரு புறமிருக்க மொழியும்—சமயமும்—தமிழும் சைவமும்—இக்காலச் சேதுக்களாக உள்ளமை குறிப்பிடத் தக்கது. தமிழ் வாயிலாகத் தமிழர்களால் நன்குணரப் பெற்ற அரசகேசரியார், ஞானப்பிரகாசர், ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, கதிரைவேற்பிள்ளை, விபுலானந்தர் போன்றவர்களைப் போற்றாமல் தமிழ் இலக்கிய வரலாறு நிறைவுறுமாறு எங்ஙனம்? அவ்வகையில், ஈழநாட்டு யாழ்ப் பகுதியில் தமிழ் ஆசிரியராய்த் தம் வாழ்க்கையைத் தொடங்கி எண்பது ஆண்டுகள் நிறைந்த தமிழ் முனிவராய் நிறைவுசெய்த வித்துவசிரோமணி சி. கணேசையர் வாழ்க்கையும் தொண்டும் தமிழர்க்கு வளஞ்சேர்ப்பனவாக அமையுமாற்றைக் காண்பது இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

இளமைப் பருவம்

'தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்' என்னும் திருமந்திரத் தொடரில் இடம் பெறும் 'தமிழ் மண்டலம்' என்பது பஞ்ச திராவிடத்தைச் சுட்டும் எனக் கொண்டு, அவை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டியம் எனும் ஐந்து தேயங்களுமாம் என்று கூறுகின்றனர். அத் தொடரால் சுட்டப் பெறுவன சேர, சோழ, பாண்டிய மண்டலங்களும் தொண்டை மண்டலமும் ஈழ மண்டலமும் ஆகும் என்னும் மரபும் உண்டு. அம்முறையில் தமிழ் வழங்கும் ஈழமண்டலத்தே சிறந்து விளங்கும் யாழ்ப்பாணப் பகுதியில், அந் நகரின் வடபால் எட்டுக் கல் தொலைவில் வளங்கொழிக்கும் புன்னாலைக் கட்டுவன் என்னும் ஊர் உள்ளது. மருத நிலவளமும் மனித மனநலமும் ஒருங்கே பெற்ற அவ்வூரின் இயற்கை எழிலை,

'பொய்கையும் கழனியும் பொலிந்தழ கூட்டத்
தீம்பழக் கதலியும் மாம்பழ மரங்களும்
விண்ணுயர் பூகமும் கன்னலுடைக் கரும்பும்
நெடுந்தாட் பெண்ணையும் குறுந்தாட் பலவும்
ஆமிவை பழுநிய பூமலி சோலையில்
கிஞ்சுக மணிவாய் அஞ்சுக மிருந்து
செஞ்சொற் சூத்திரம் சீருறச் செப்ப
வன்னப் பூங்குயில் அதற்குரை வகுப்பப்
பொன்னங் கோட்டினில் பூவைகேட் டுவக்கும்
புன்னையம் பதி''

என்னும் செய்யுட் பகுதியால் அறியலாம். இவ்வூரில் வாழ்ந்த சைவ அந்தணர்களுள், காசிபகோத்திரத்தில் வந்த சின்னையர் என்பார், சின்னம்மாள் என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு வாழ்ந்தார். அவர்கள்தம் இல்லறப் பயனாய்த் தோன்றிய மக்கள் ஐவருள், முதல் நால்வர் பெண்மக்களாக, ஐந்தாமவராகக் கணேசையர் பிறந்தார். புன்னை ஆயாக் கடவைச் சித்திவிநாயகர் அருளால் தோன்றியமையால் கணேசன் எனப் பெயரிட்டு வளர்த்தனர். ஈசுர ஆண்டு பங்குனி, பதினைந்தாம் நாள் (26-3-1878) பிறந்த கணேசையர், குல மரபுச் சடங்குகள் குறையாமல் செய்விக்கப் பெற்று உரிய காலத்தில் பள்ளிக் கல்விக்கு அனுப்பப் பெற்றார். இறையன்பும் கல்வி நாட்டமும் மிக்க குடிப்பிறந்த அவரிடம் அவை இயல் பாகவே மிக்கிலங்கின. இவற்றை இவர்தம் ஆசிரியராய் விளங்கிய சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரவர்கள், ஐயரவர்களின் இரகுவமிச உரைக்கு வழங்கிய பாயிரச் செய்யுளொன்றில் பின்வருமாறு காட்டியுள்ளார் :

"காசிபகோத் திரமுடையான் புன்னைநகர்ச் சின்னைய
நாதன் மைந்தன்
தேசிகன்வித் துவசூடா மணிபொன்னம் பலப்பெயர்
கொள் செம்மல் பாங்கே
பேசரிய விலக்கியமு மிலக்கணமும் பிறநூலும் பெரிது.
கற்றோன்
பூசுரர்கோன் கணேச னெனும் பெயருடையோன்
கவிபாடும் புலமைமிக்கோனே".

கல்வி

புன்னையம்பதியில் தம் பெரியதந்தையார் கதிர்காமஐயர் நடத்திய பள்ளியில் ஒன்று முதல் எட்டு வகுப்புக்கள் வரை பொதுக் கல்வி பெற்றுக் கணிதம், வரலாறு சமயம் போன்ற பாடங்களில் சிறப்பு நிலையில் தேர்வுற்றார். அப்போது இவர், வகுப்பிற்குத் தேர்வாளராக வந்த அறிஞர் பொன்னம்பலம் பிள்ளையவர்கள் 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' எனும் செய்யுட்குக் கூறிய நயவுரைகேட்டு, அவர்பால் தமிழைச் சிறப் பாகக் பயிலும் அவாக் கொண்டார். தம் பெரியதந்தையாரிடமே தமிழையும் வடமொழியையும் ஓரளவு கற்ற ஐயர், தம் சுற்றத் தார் விருப்பிற்கு மாறாக, ஆசிரியப் பயிற்சிக்குச் செல்லாமல்,

தமிழ்கற்கச் சென்றார். யாழ்ப்பாண வண்ணையம்பதியில் வாழ்ந்த வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளையவர்கள் தம் தமக்கையார் வீட்டிற்கு எதிர்வீட்டுத் திண்ணையில் மாணவர் சிலருக்குத் தமிழ்கற்பித்து வந்ததனை அறிந்து, தம் தமக்கை வீடு சென்று, அவர் பாடஞ் சொல்லுவதைக் கேட்டுவந்தபோது அவரால் மாணவராக ஏற்றுக் கொள்ளப் பெற்றார். அத்திண்ணை வீட்டின் தலைவரான அர்ச்சகர் பிச்சுவையரால் வடமொழிப் புலமையையும் வளர்த்துக்கொண்டார்.

பொன்னம்பலப் பிள்ளையவர்கள் பால் இலக்கண இலக்கிய இதிகாசக் கல்வி கற்றார் கணேசையர். பிள்ளையவர்கள் காலமானபிறகு ஐயரவர்களின் கல்வி, சுன்னாகம் குமாரசாமிப் புலவரவர்களிடம் தொடர்ந்தது. அவரிடம் உயர்தர இலக்கண இலக்கியக் கல்வியொடு, வடமொழிக் காவியங்கள், நாடகங்கள் சமயநூல் ஆகியவற்றில் புலமையும் நிரம்பப்பெற்றார். இவர்தம் உறவினராய்த் திருப்பரங்குன்றத்தே இருந்த காசிவாசி செந்திநாதையர்பாலும் சிலகாலம் கல்வி பயின்றார். இவ்வாறு இரு மொழிப் புலமை சான்ற ஐயரவர்கள், ஆசிரியராய்ப் பணியேற்ற நிலையிலும், பின்னர் மணம்புரிந்து இல்லறமேற்ற நிலையிலும் ஆசிரியர் பால்கற்றலை மறவாது ஓய்வு நாட்களில் உடல் துன்பம் பாராது நடந்து சென்றும் கற்றுவந்தனர்.

ஆசிரியப்பணி

தம் 21-ஆம் வயதிலேயே ஆசிரியராகப் பணி புரியும் வாய்ப்புப்பெற்ற ஐயரவர்கள், வண்ணை விவேகானந்த வித்தியாசாலையிலும், பின்னர் வண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக் காவியப் பாடசாலையிலும், புன்னை, வியாவிளான், குரும்பசிட்ட என்னுமிடங்களில் இருந்த பள்ளிகளிலும் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். தலைமை ஆசிரியராகப் பணிபுரியத் தேவைப்படும், பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருந்தமையால் பின்னர்ச் சில பள்ளிகளில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி யுள்ளார்.

தமது 32-ஆம் அகவையில் இவர், வருத்தலை விளான் என்னுமிடத்தில் வாழ்ந்த யோகவன் சாத்திரிகளின் ஒரே புதல்வியான அன்னலக்குமி அம்மையாரைத் திருமணம் புரிந்து கொண்டார். திருமணத்திற்குப் பின்னர்த் தையிட்டி என்னு மூரில் தம்

மாமனாரால் நடத்தப் பெற்ற பாடசாலையில் தலைமை ஆசிரியாகத் திகழ்ந்தார், பின்னர் நயினார் தீவு என்னும் நீர் சூழ்ந்த நாட்டுப் பகுதியில் தன் மனைவியாரொடு சென்று, அங்குள்ள தில்லையம்பல வித்தியாசாலையில் உயர் இலக்கண இலக்கிய வகுப்புக்களை ஏழாண்டுக் காலம் நடத்தி வந்தார் என்பது தெரிகிறது. அப்பள்ளியின் முகவரான கந்தரோடை வழக்கறிஞர் திரு. வே.சி. பொன்னம்பலம் அவர்களும், குமாரசாமிப் புலவரவர்களும் தோணியில் ஏறிச்சென்று பள்ளியைப் பார்வையிட்டதோடு, ஐயரவர்களின் கல்வித் தொண்டின் மாட்சியையும் அறிந்து மகிழ்ந்து மீள்வர் ஐயரவர்களின் நயினார்த் தீவு, வாழ்க்கை, கற்பித்தலும் நூலாய்வும் கொண்ட இனிய இல்லறமாகத் திகழ்ந்தது.

மதுரையில் தோன்றிய தமிழ்ச் சங்கத்தினை முன்மாதிரியாகக் கொண்டு, 1921-ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கம்' என ஒரு சங்கம் நிறுவப் பெற்றது. அதனை நிறுவியவரும், சங்கச் செயலருமாக விளங்கிய திருவாளர் யா.தி. சதாசிவ ஐயர், அச்சங்கம் நடத்தும் பிரவேச. பால பண்டித, பண்டிகத் தேர்வுகட்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கத்தொடு 'பிராசீன பாடசாலை' என்னும் கல்வி நிறுவனத்தை உருவாக்கினார். அவர்தம் அழைப்பினை ஏற்றுக் கணேசையரவர்கள் 1921-ஆம் ஆண்டில் அதற்குத் தலைமைப் பேராசிரியர் பணியினை ஏற்றார்கள். அங்கு இவர்கள் 11 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்கள். இந்தக் காலம் ஐயரவர்களின் புலமை, ஆழமும் அகலமும் எய்துவதற்கு வாய்ப்பாக அமைந்தது. தொல்காப்பியம் போலும் உயர்தமிழ் இலக்கணங்களின் பல்வேறு உரைகளையும் ஒப்புநோக்கிப் பயிலவும், பயிற்றவும் கிடைத்த பேறு, பின்னர்த் தொல்காப்பிய உரைக் குறிப்புக்களையும், புதிய ஆய்வுக் கருத்துக்கலளயும் தமிழ் உலகிற்கு வழங்குதற்கான களமாக அமைந்தது.

எக்காலத்திலும் தாம் மேற்கொண்ட ஆசிரியப் பணியைத் தம் வாழ்க்கைக்கு வளம் தேடும் வாயிலாகக் கொள்ளாமல், மாணவர்களுக்கு ஞான தானம் வழங்கும் தொண்டாகவே ஐயரவர்கள் மேற்கொண்டார்கள். பிராசீன பாடசாலைப் பணியை விடுத்த பின்னர் ஐயரவர்கள், நூல்கள் எழுதுவதிலும் தனியே தம்மை நாடி வருவோர்க்குக் கற்பித்தலிலும் இறைவழிபாட்டிலும் காலத்தைக் கழித்து வந்தார்கள். பாடஞ்சொல்லுங்

கால் கற்கண்டிதனைச் சுவைப்பதில் ஆர்வமுடைய ஐயரவர்களின் பாடபோதனையும் மாணவர்க்குக் கற்கண்டாய் இனித்தமையினை அவர்பால் கற்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர் மனைவியார் காலமான பிறகு, மறுமணம் செய்யும் நாட்டமின்றியே வாழ்ந்தார் என்று கூறப்படுவது கொண்டு மறுமணம் செய்து கொள்ளக் கூடிய வயதில் இவரது மனைவியார் காலமானார் என்பதனையும், அதனால் தம் மனைவியார்பால் இவர் கொண்டிருந்த அன்பு மாட்சியினையும் அறிய முடிகிறது. இறுதிக் காலத்தே பல ஆண்டுகள் துறவுள்ளங் கொண்டு ஐயரவர்கள் வாழ்ந்தமைக்குரிய காரணங்களுள் மகப்பேறின்மையும், மனைவி இறந்தமையும், திருவருளால் பிறவாமை வேண்டிப் பிறப்பற முயலும் வேட்கை தோன்றிய'மையும் சிலவாகலாம். அகத் துறவு பூண்டு, ஏகனாகி இறைபணி நிற்றலை அவாவிய ஐயரவர்கள், சிவதீக்கை பெற்றுச் சிவாகம விதிப்படி நாடோறும் சிவபூசை செய்து வருவாராயினார். தம் மனைவி ஊராகிய வருத்தலை விளானில் எஞ்சிய வாணாளைக் கழிக்க விரும்பிய ஐயரவர்கள், அவ்வூர் மருதய விநாயகர் ஆலயத்தின் அருகில் தென்பால், ஒரு சிறிய ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு பற்றற நோற்று வருவாராயினர் அந்த ஆசிரமம் தானும் சுற்றுச் சுவர்களும் தென்னங்கீற்றால் அமையப்பெற்று அதனால் வேயப்பெற்ற சிறியதொரு ஓலைக்குடிலேயாகும். வீடு பேற்றை அவாவிய ஐயரவர்க்கு அந்த ஆசிரமம் ஒரு வெயின் மறையாக அமைந்ததேயன்றி வீடாக அமையவில்லை! 'எட்டடிக் குச்சுக்குள்ளே கந்தையா எத்தனை நாளிருப்பேன்' என்னும் ஞான மார்க்கத் தத்துவமுணர்த்தும் பாடலுக்கு அமைந்த ஒரு புறச் சின்னமாகவே அக்குடில் அமைந்தது!

சமயப்பணி

ஐயரவர்களின் பெற்றோர் தெய்வநம்பிக்கை சான்றவர்களாக, குறிப்பாக விநாயகப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டவர்களாக வாழ்ந்தவர்களாதலின், இவரும் இளமை தொட்டே இறைபக்தி மிக்கவராய், மூத்தபிள்ளையார் பால் யாத்த நெஞ்சினராய் வாழ்ந்து வர, காலஞ் செல்லச்செல்ல அப்பக்தியுணர்வில் கனிந்தவராய், விளங்குவாராயினர். இளமை தொட்டே வழிபட்டு வந்த புன்னையம்பதி ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்திற்குத் தம் செலவில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழாச்செய்தார். மேலும், அவ்வாலயத்தே

எழுந்தருளியுள்ள சுப்பிரமணியசுவாமிக்கு, வள்ளிதெய்வானை உடனாய சுப்பிரமணியர் உற்சவத் திருமேனி அமைத்து மகிழ்ந்தார். இதனைத் தந்தையார் விருப்பினை ஏற்றுத் தம் நிலம் பொருள் ஆகிய உடைமைகளைக் கொண்டு முற்றுவித்தார்.

பின்னை நாளில் தாம் வாழ்ந்து வந்த வருத்தலை விளானில், மருதடியின் கீழ் வீற்றிருந்தருளும் விநாயகப் பெருமானுக்குத் திருப்பணிகள் பல, தம் பொருள் கொண்டும், அன்பர்கள் துணைக் கொண்டும் செய்தார். தமது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் அன்பர்கள் தமக்களித்த பொற்கிழிப் பொருள் உருபா இரண்டாயிரத்தைக் கொண்டு அங்குள்ள விநாயகப் பெருமானுக்குப் பொன்னால் திருமுடியும், உபவீதமும் (பூணூல்) செய்வித்து, அலங்கரித்து மகிழ்ந்தார். தமது வழிபடுதெய்வமாய் விளங்கும் விநாயகர் புன்னை ஆயாக் கடவையிலும், வருத்தலை மருதடியிலும் ஒக்க அமர்ந்து அருள்பாலிக்கும் பாங்கினைத் தம் வருத்தலை விளான் மருதடி விநாயகர் இருபா இருபஃது நூலுள் பின்வருமாறு போற்றியுள்ளார்.

'என்குலத் தந்தணர் நின்னடித்தொண்டினை
வழிவழிச் செய்து வாழும் புன்னைமா
நகரின் மேவிய நற்றளி யிற்போல்
வீயா மருதடி மேவும் மூலத்தும்
உற்றே அருள்செயும் உயர்பரம் பொருளே''

வருத்தலை விளான் மருதடி விநாயகர் ஆலயத்தின் அருகே ஒரு மடம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அதன்பொருட்டு அன்பர் ஒருவரின் உதவி நாடியதும், அது பற்றி அவருக்குப் பின்னர்க்கடிதம் எழுதியதும் கொண்டு ஐயரவர்களின் உள்ள மாட்சியினை உணரமுடிகின்றது. அக்கடிதக் குறிப்பு வருமாறு;

''அன்புருவே! உன் உதவியால் யானொரு மடம் மருதடி விநாயகனுக்கு அமைத்து வருகின்றேன். சிலகாலம் யானும் வசிக்கலாம். உன்கை விசேடம் நன்மையாகுக. நிற்க, இனியான் சொன்னபின் அன்றி உதவி செய்யற்க. இங்கே இல்லத்திற்கு வந்தால், பெரியோய், இந்த இரவலனையுங் காண்க வேண்டு வதிதுவே

இங்ஙனம்
சி. கணேசையன்
வருத்தலை விளான்

எழுத்துப்பணி – நூல்கள்

1. இரகுவமிச உரை : இரகுவமிசம் வடமொழிப் பெருங் கவிஞர் காளிதாசனால் இராமபிரான் மரபினராய மன்னர்களைப் பற்றிப் பாடப் பெற்ற தீஞ்சுவைக் காவியமாகும். ஈழநாட்டு வேந்தன் பரராச சேகரன் மருகராய அரிகேசரி என்பவரால் இது தமிழ்ப்படுத்தப்பட்டது. வளமிக்க இந்நூல் நடைச்செறிவால் பயில்வார்க்குச் சற்றே அருமையுடையதாக உள்ளது. குமார சாமிப்புலவர், இரகுவமிசக் கருப்பொருள் விளக்கம் என்றொரு குறிப்புரை வரைந்துள்ளார். இந்நூலினை எளிதிற் கற்றுச் சுவை நலம் அறிதற்கு வாய்ப்பாகக் கணேசையரவர்கள் விளக்கவுரை எழுதத் தொடங்கிப் பாயிரமுதல் முதல் ஒன்பது படலங்களுக் கான பகுதியை முதல் தொகுதியாக 1915-இல் வெளியிட்டுள் ளார்கள். எஞ்சிய ஏழு படலங்களுக்குமான உரையினை இரண் டாம் தொகுதியாக 1932-இல் வெளியிட்டுள்ளார். இவை கொக் குவில் சோதிட பரிபாலன் அச்சகத்தில் பதிக்கப்பெற்றன.

2. பண்டிதத் தேர்வெழுதும் மாணவர்கட்கு இலக்கணப் பாடம் சொல்லுகையில் பெற்ற பட்டறிவின் பயனாக, ஐயரவர் கள் தொல்காப்பிய உரை நூல்களைத் தம் குறிப்புரையோடு பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். இப்பெரும் பணி, இவர்தம் அரிய தமிழ்ப் புலமையையும் ஆராய்ச்சி நுண்ணுணர்வையும் தமிழகம் போற்றிக் கொள்ளுமளவு சிறப்புப் பெற்று விளங்குகிறது. தமிழகத்தில் டாக்டர் உ..வே.சா ,மு. இராகவையங்கார், ரா. இராகவையங்கார், அரசஞ் சண்முகனார், மறைமலையடி களார் போன்றாரால் கருதிச் சிறப்பிக்கு மளவு, இவர்தம் புலமைப் பெருமை சிறப்புற்று விளங்குவதற்கும் காரணமாக இருப்பணி அமைந்தது.

தொல்காப்பியம், எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரை, 1937-ஆம் ஆண்டில் ஐயரவர்களின் விளக்கக் குறிப்புரையோடு, ஈழகேசரி பொன்னையா அவர்களால், சுன்னாகம் திருமகள் அச்சகவாயிலாக வெளியிடப்பட்டது. அது மீண்டும் 1952-இல் மறுபதிப்புச் செய்யப்பட்டது. அடுத்துத் தொல்காப்பியச் சொல் லதிகாரச் சேனாவரையருரை ஐயரவர்களின் விளக்கக் குறிப்புரை யோடு, முதற்பதிப்பு 1936-இலும், அடுத்தபதிப்பு 1952-இலுமாக வெளியிடப்பட்டன. பின்னர்த் தொல்காப்பியப் பொருளதிகாரப் பிற்பகுதிக்கான (மெய்ப்பாட்டியல் முதலாக) பேராசிரியர் உரை

1943-இல் ஐயரவர்களின் விளக்கவுரையோடு வெளிவந்தது. பின்னர், அவ்வதிகார முற்பகுதி நச்சினார்க்கினியர் உரை வெளி வந்தது

இப்பதிப்புக்கள் அனைத்தும் அழகியதாளில் சிறப்பாக அச்சிடப்பட்டனவாகும். ஆய்வாளர்க்குத் தேவைப்படும், நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறுகள் அரும்பதவுரை போன்ற குறிப்புக்கள் கொண்டனவாய் பயன்மிக நல்குவனவாய் அமைந்தன. டாக்டர் உ. வே. சா. போன்றார் ஐயரவர்களின் குறிப்புக்களையும் பதிப்புப்பணியையும் பாராட்டியுள்ளனர். இப்பதிப்புக்கள் அனைத்தும், ஈழகேசரிப் பொன்னையா, அவர்தம் குடும்பத்தவர் ஆகியோர் உதவியால் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. ஐயரவர்களின் குறிப்புரைகளுள் சிறியவையாக இருப்பனவும், பொருளுணர்ச்சிக்கு எத்துணை அளவு பயன்படுவனவாக உள்ளன என்பதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களால் உணரலாம்.

அ) தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம் நூற்பா (பிறப்பியல்) 96 "இத்துணையும் நாவதிகாரம் கூறிற்று" என்னும் நாச்சினார்க்கினியர் கூற்றினை ஐயரவர்கள், சூத்திரத்தில் நாவிற் பிறக்கும் எழுத்தை அதிகாரப்படவைத்து அது முதலாக நாவிற் பிறக்கும் எழுத்துக்களையே கூறிவந்தமையை அதிகாரம்—தலைமை, முறைமை என்பர் நச்சினார்க்கினியர் என்று விளக்கியுள்ளார்.

ஆ) தொல்-சொல்-சேனாவரையம்-நூற்பா. 8
"கிடக்கை முறையாற் கூறாது தறட எனச் சிறப்பு முறையாற் கூறினார்" என்று சேனாவரையர் கூறியுள்ளதனை ஐயரவர்கள், "கிடக்கை முறை என்றது நெடுங்கணக்கினுள் ஓதப்பட்டுக் கிடக்கும் முறையை கிடக்கை முறைப்படி கூறின் டதற என்று கூறவேண்டும்" என விளக்கியுள்ளார்.

இ) தொல், பொருள், மெய்ப்பாடு, பேராசிரியர்
நகைச்சுவை தோன்றுதற்குரிய களங்களுள் ஒன்றாக 'ஆரியர் கூறும் தமிழின் கண்ணும்' என்று பேராசிரியர் கூறியுள்ளதனை ஐயரவர்கள், "ஆரியர் என்பார் வடமொழியாளராகிய ஆரிய தேசத்தவர். அவர் தமிழை எழுத்து நிரம்பக் கூறமாட்டாராதலின் அதுவும் நகைக்கேதுவாயிற்று" என்று விளக்கியுள்ளார்.

செந்தமிழ் இதழில் அவ்வப்போது தொல்காப்பிய இலக்கணம் பற்றி எழுதிய கட்டுரைகளிற் சிலவற்றைத் தம் தொல்காப்பியப் பதிப்புக்களின் இறுதியில் அனுபந்தமாகப் பதிப்பித்துள்ளார். அவை அந்தப் பதிப்புக்களைப் பயில்வார்க்குப் பெரிதும் பயன்படுமாறு உள்ளன.

3. குமாரசாமிப் புலவர் சரித்திரம்: இஃது ஐயரவர்களின் ஆசிரியர்களுள் ஒருவரைப் பற்றி எழுதிய வாழ்க்கை வரலாற்று நூலாகும்.

4. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் ஈழநாட்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களின் வரலாறுகளைத் தொகுத்து ஐயரவர்கள் இதில் வழங்கியுள்ளார்கள். தமிழ் இலக்கிய வரலாறு இருபதாம் நூற்றாண்டு வரை முழுவதுமாக எழுதப்படுவதற்கு இச் சரித்திர நூல் இன்றியமையாத தொன்றாகும், இதனைப் பிற்பற்றி மற்றவர்களும் எழுதியுள்ளனர். இந்த நூலினை மேலும் விரிவுபடுத்தி எழுத நினைத்த ஐயரவர்களின் விருப்பம் நிறைவேறாது போயிற்று.

5. குசேலர் சரித்திரம்: புராண இதிகாசங்களில் இடம் பெற்ற கதை நிகழ்ச்சிகளை இளைஞர்கட்கு உணர்த்தல் வேண்டும் என்னும் நோக்கில் எழுதப்பட்டது. ''இலகுவானதும் பொருட் செறிவுடையதும் வனப்புடையதுமான உரைநடை எழுதுவதில் இவ்வாசிரியர்க்குள்ள ஆற்றல் பள்ளிக்கூட மாணவர்க்காக எழுதப்பட்ட இந்நூலினின்றும் நன்கு புலப்படும். சிறிய வாக்கியங்களாலாகிய மிகவினிய ஓசைநயம் அமைந் தொழுகுகின்றது'' என்று இந்நூலின் ஒன்பதாம் பதிப்புக்கு 1931-இல், அணிந்துரை வழங்கிய அந்நாள் அமைச்சர் சு. நடேசபிள்ளையவர் கூறியுள்ளமை கொண்டு ஐயரவர்களின் உரைநடைச் சிறப்பினை உணரலாம்.

6. மருதடி விநாயகர் இருபா இருஃது (1949): ஐயரவர்கள் தம் இறுதிக் காலத்தில் வாழ்ந்து வந்த வருத்தலை விளான் மருதடிவிநாயரைத் துதிக்கும் வகையில் சில பக்திப் பிரபந்தங்கள் பாடியுள்ளார்கள். அவை பின்னர் 1956-இல் ஒன்றாகத் தொகுப்கப்பெற்றுத் தனித் தொகுதியாகவும் வெளியிடப் பெற்றன. மருதடிவிநாயகர் இருபா இருபஃது நூல், 1949-ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் நடை சங்கச் செய்யுளை நடையினை ஒத்தமைந்தது. ஓசைநலம், பொருளாழம், தன்மை நவிற்சிப்

பாங்கு போன்றவற்றிலும் சங்கப் பாடல்களை ஒத்தமைந்து ஐயரவர்களின் சங்க நூற் பயிற்சியையும், பக்தியுணர்வையும் உணர்த்துவன வாகவுள்ளன. இதன் கண்ணமைந்த

குவளைக் கானம் துவளப் பகட்டினம்
சென்று புல் அருந்து துன்னுபல் வயல்கள்
சூழும் வருத்தலைத் தொன்மா நகரிடை
ஏனற் கதிர்போல் இலங்குவெண் மலர்கள்
விரிதரும் சினைகள் மேவு மருதடி
போற்றிட வமரரும் வீற்றிருந்தருளும்
மதமா முகத்தொரு வான்பெருங் கடவுளே — என்னும்

செய்யுட் பகுதியில், வருத்தலை நகரின் இயற்கை நலனும், ஆண்டு மேவும் மருதடி விநாயகர் மாண்பும் கவினுறக் காட்டப் பெற்றுள்ளன. இந்நூலொடு, விநாயகர் வழிபாட்டுப் பயன் கூறும் விருத்தங்கள் பத்தும், தைப்பூசச் சிறப்புக் கூறும் செய்யுட்கள் ஐந்தும் இணைக்கப்பட்டுள்ளன.

விநாயகர் அந்தாதி

வருத்தலை மருதடி விநாயகர் மீது பாடப் பெற்ற இந்த அந்தாதி நூல் பக்திச் சுவை மலிந்த பாடல்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒன்று:

"போற்றுவன் மாமருதீசன் பதங்களைப் போற்றிமிக
மாற்றுவன் எந்தன் மனத்தின் நிலையினை; மாற்றிஇன்பம்
தோற்றுறு மோனநிலையினைப் பெற்றுச் சுகமடைவன்
கூற்றுவன் தன்னை அருளெனும் வாளால்
கொலைசெய்வனே"

இதன்கண், தாம் மருதீசர் பதம் போற்றிச் சும்மா இருக்கும் சுகம் பெற்ற பாங்கினையும், அதனால் பிறவாப் பெருநிலை எய்தற்காம் தகுதி பெற்றதனையும், ஐயரவர்கள் நன்கு காட்டியுள்ளார்கள். 'கூற்றம் குமைத்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப் பட்டவர்க்கு 'என்னும் தமிழ்மறையை மெய்ப்பிக்கும் வகையில், ஐயரவர்கள் எய்திய சித்தி நிலையினைக்" கூற்றுவன் தன்னை அருள் என்னும் வாளால் கொலை செய்வனே" என்னும் தொடரால் அறியமுடிகின்றது. 'நமனை அஞ்சோம்' எனும் ஏமாப்பினையும் இதன்கண் உணரலாம்.

7. மருதடி விநாயகர் கலி வெண்பாவில், அப்பெருமானை நினைந்து போற்றி வழிபடும் பாங்கினைச் சிறப்பாகக் காட்டி யுள்ளார். அது வருமாறு :-

"தஞ்சமென
எத்திக்கும் போற்றியிடும் ஏரம்ப மூர்த்தியினைத்
தித்திக்கும் மேலாய தெள்ளமுதை — முத்திக்கும்
காரணத்தை மெய்ஞ்ஞானக் கண்ணுக்குத் தோற்றியிடும்
பூரணத்தை மெகுறைகள் பேர்க்கியிடும் — காரணத்தை
ஏத்தவுயர் பூவால் இனிமையொடும் அர்ச்சனை செய்து
ஆற்றுமுனை என்பால் ஆக்குவாய்"

8.9, மருதடி விநாயகர் மீது கலித்துறை, ஊஞ்சல் போன்ற பிரபந்தங்களையும் பாடியுள்ளார்.

'வடிதரு மங்குச பாரம் கரமேல் வைத்தாய்
வல்லபை யங்குச பாசம் உரமேல் வைத்தாய்"

என்பது போலச் சொல்லணிகள் அமைந்த பாடல்கள் இலக்கியத் தும்பிகளுக்கு இன்ப விருந்தளிப்பனவாகும். இவ்வடியில் அங்குச பாசம் என்னும் தொடர் 1) அங்குசம்+பாசம் என்றும், 2) அம்+குசம்+பாசம் என்றும் பிரிந்து நின்று சொற்சுவை பயந்து நிற்கக் காணலாம்.

10. மேகதூதக் காரிகை எனும் நூலுக்கும் ஐயரவர்கள் உரையியற்றியுள்ளார்கள். இவர்கள் அகநானூற்றுப் பாடல் களுக்கு விளக்கவுரை எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அது பற்றி விவரம் கிடைக்கவில்லை.

கட்டுரைப் பணி

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' அக் காலத்தில் தமிழ்மொழியில் தலைசிறந்த அறிஞர்களின் கட்டுரை களைத் தாங்கி வந்தது. அதில் கட்டுரை வரைவது, ஒருவரது தமிழ்ப் புலமைச் சிறப்பினைக் காட்டும் அளவுகோலாக அமைந் தது. ஐயரவர்கள் தம் 25-ஆம் அகவையிலேயே அவ்விதழில் கட்டுரை எழுதத் தொடங்கியமைகொண்டு அவரது புலமை மாட்சியினை உணரலாம்.

இவரது முதற்கட்டுரை செந்தமிழ் முதற்றொகுதியின் 11-ஆம் இதழில் வெளியாயிற்று, இறுதிக் கட்டுரை அதன்

48-ஆம் தொகுதி 10 ஆம் இதழில் வெளிவந்தது. செந்தமிழ் இதழில் ஏறத்தாழ 48 ஆண்டுகள் இவர்கள் கட்டுரைகள் எழுதும் வகையில் தொடர்பு கொண்டு வந்துள்ளார்கள். ஏறத்தாழ நூறு இதழ்களில் இவர்களுடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இராமவதாரச் செய்யுட் பாடாந்தரம் என்னும் கட்டுரை தொடர் கட்டுரையாக 27 இதழ்களில் வெளிவந்தன. இவ்விதழில் வந்துள்ள கட்டுரைகளை நோக்குங்கால் அவை இவரது தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை, வாதத் திறமை, திறனாய்வுத் திறன் போன்றவற்றை விளக்கும் சான்றாகத் திகழ்கின்ற பாங்கினை உணரலாம்.

இலங்கை இதழான ஈழகேசரியில் இவர் மிகப் பல கட்டுரை களை எழுதியுள்ளார். அகநானூற்றுப் பாடல்களுக்கு விளக்கமும் எழுதியுள்ளார் எனத் தெரிகிறது. புதுவை வித்தக இதழிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது புலமையிலும் தொண்டிலும் ஈடுபாடு கொண்ட ஈழகேசரி அதிபர் பொன்னையா அவர்கள் இவர்களைப் பெரிதும் போற்றிச் சிறப்புச் செய்து உதவி வந்த தோடு, இவர்தம் தொல்காப்பியப் பதிப்புக்கள் செவ்விய முறை யில் வெளிவரவும் உதவியுள்ளார்கள். ஆகுபெயர் அன்மொழித் தொகை பற்றிய கருத்தில் ஐயரவர்கள் அரசஞ் சண்முகனாரோடு மாறுபாடு கொண்டு செந்தமிழில் எழுதிய கட்டுரைகள் தமிழ றிஞர்களின் கவனத்திற்குரியனவாயின. "தொனி" போலும் இலக்கணக் கட்டுரைகள் தமிழ் அறிஞர்கள் செந்தமிழ் வாசகர் கள் ஆகியோர்தம் பாராட்டைப் பெற்றுத் தந்தன.

தம்மைப் பாராட்டிப் போற்றிய பெருந்தகையாளராகிய 'ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் 'சமாதான நீதிபதியாக' (J.P.) நியமிக்கப் பெற்றபோது ஐயரவர்கள் அவரை வாழ்த்திப் பாடிய பாவொன்றினால் அவர்களின் புலமைத் திறத்தையும், நன்றியறிதலுணர்வையும் உணர முடிகின்றது. அப்பாடல் வருமாறு :-

"கொடிகளெல்லாம் படர்பெரிய மரமெனவும், கிளை
கொண்டு பணைத்து நீண்டு
முடிவில்பழம் பழுத்தெவர்க்கும் நிழல்கொடுக்கும் ஆல்
எனவும் மேலாயோங்கிப்
படியதனி லூர்நடுவே நீர்நிறைந்த குளம்போலப்
பலர்க்கும் என்றும்

நெடிது பயன்படுகின்றோன் வண்மை ஒரு வடிவெடுத்து நின்றாற் போல்வான்''

சிறப்புக்கள் :

ஐயரவர்களின் மாணவர்கள் தம் ஆசிரியரவர்களை அவர் தம் புலமைப் பெருமை உணர்ந்து 'மகாவித்துவான்' என்றே போற்றி அழைத்து வந்தனர்.

இவர்களது அறுபதாம் ஆண்டு நிறைவு விழா (1938) யாழ் நகரில் அதற்கென அமைக்கப்பெற்ற குழுவினால் சிறப்பாக நிகழ்த்தப் பெற்றது. வண்ணை நகர்க்கோயில் முன்றிலிலிருந்து விழவுக்களம் வரை ஐயரவர்களை அலங்கரிக்கப் பெற்ற இரத்தத்தில் ஊர்வலமாக அழைத்துச் சென்று சிறப்பித்தார்கள். விழாவில் உருபா 2000 கொண்ட பொற்கிழி வழங்கப் பெற்றது. அதனை அவர்கள் விநாயகப் பெருமான் திருப்பணிக்கெனவே பயன் படுத்தியது குறிப்பிடத்தக்கது.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம், தமது நான்காம் ஆண்டு விழாவை யாழ்ப்பாணத் திருநெல்வேலி நகரிலுள்ள பரமேசுவரக் கல்லூரியில் கொண்டாடியது. டாக்டர் ரா பி. சேதுப்பிள்ளை, விஞ்ஞானி டாக்டர் கே.எசு. கிருட்டிணன், சுதேசமித்திரன் ஆசிரியர் திரு சி.ஆர். சீனிவாசன் ஆகியோர் தலைமையில் மூன்று நாள் நிகழ்ந்தது. அதில் சிறப்பு நிகழ்ச்சி யாக மகாவித்துவான் ஐயரவர்களுக்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது விஞ்ஞானப் பேரறிஞர் கிருட்டிணன் அவர்கள் ஐயரவர்கட்குப் பொன்னாடை போர்த்திப் பெருமைப் படுத்தினார்கள்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபி விருத்திச் சங்கம் தம் 29-ஆம் ஆண்டு விழாவில் (1-12-1952). ஐயரவர்களைச் சிறப்பிக்க எண்ணியது. அதன் விளைவாக ஒரு சிறப்புப் பட்ட மளிப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்து அதில் ஐயரவர்கட்கு 'வித்துவ சிரோமணி' என்னும் பட்டம் வழங்க முற்பட்டது. 'மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்' என்னும் மன நிலையில், 'புளியம் பழமும் ஓடும்' போன்ற பற்றற்ற நிலையில் அகத்துறவு பூண்ட நிலையில் வாழ்ந்து வந்த ஐயர வர்கள் அதனை ஏற்கும் நாட்டமில்லாதவராகத் தமது தவச் சூழலில் இருந்து வந்தார். எனினும், சங்கத்தார் தாமே ஐயர

வர்களின் இல்லம் எகி அவர்களை வேண்டி இசைவு பெற்று 'வித்துவ சிரோமணி' என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கிப் பெருமை பெற்றனர்.

இறுதி நிலை

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான் — மொழித் திறத்தின் முட்டறுப்பான் ஆகும், மொழித்திறத்தின் முட்டறுத்த நல்லோன், முதல் நூல் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெறும். என்னும் ஒரு பழம் பாடல் ஏட்டுக்கல்வி நிரம்பியவன் எய்தலாகும் வீட்டுப் பயனை விளம்புகிறது திருவருளால் கட்டறுத்து வீடு பெறும் நிலை எய்திய அளவில், பெற்ற ஏட்டறிவு முழுதும் தேவையற்றதாய் — பயனிலதாய்க் காணப்படும் பரஞானம் எய்தும் நிலையில் அபரஞானம் பயனற்றதாகும். 'கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்' என்னும் மணி மொழிக் கோர் இலக்கியமாகும் மனநிலையினை ஐயரவர்கள் எய்தினார் கள்: தம் பொருள்கள் நூல்கள் அனைத்தையுமே மற்றவர்க் களித்து விட்டார்கள். தமக்கிருந்த சிறிய நிலப் பகுதியையும் மருதடி விநாயகருக்குக் அளித்து விட்டார். கற்றுப் பெற்ற ஞான மெல்லாம், சிற்றில் இழைத்து விளையாடும் சிறுமியர் அட்ட மணற்சோறே போன்ற தென்னும் மெய்யுணர்வு கைவரப் பெற்றார். அதனைத் தம் அந்தாதிப் பாடலொன்றில்,

> ''அறியாமை நீக்குறும் கல்வி என்றெண்ணி அலைவுற்ற யான்
> சிறியார்கள் செய்த மணற்சோ றதுவெனத் தேர்ந்து கொண்டேன்
> செறியா மலர்சேர் மருதடித் தேவநின் சேவடியே
> அறியாமை தன்னை அகற்றுவது என்ப தறிந்த பின்னே''

என்று காட்டியுள்ளார்.

இத்தகு நிலையில் விளங்கிய ஐயரவர்களை, ''மோக முனி தவக்கடலாம் முத்தமிழான் கணேசசைய முனிவன் தானே'' என்று ஒரு புலவர் போற்றியது நினைந்து மகிழ்தற்குரியதாகும். இந்நிலையிலும், நூல்களில் ஐயம் தோன்றிய போது தெளிவு வேண்டித் தம்மை நாடி வந்தோர்க்குத் தெளிவுறுத்தி உதவியும் செய்துள்ளார்கள். தமிழ்ப்புலவராய் வாழ்க்கையைத் தொடங்கித் தவமுனிவராக விளங்கி ''நெஞ்சிற் பிறதே நினையேன் நினை

யன்றி'' என்னும் உறுதியுடன் 80 ஆண்டுகள் வாழ்ந்த ஐயரவர்கள் 8-11-1958 காலை 6-30 மணி அளவில் தம் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார். இது குறித்துச் சுன்னாகம் கு. அம்பலவாணபிள்ளை பின்வருமாறு கூறுகின்றார்.

':———அவருக்கு எவ்விதக் கவலையும் கிடையாது. கடைசித் தினத்தன்றுதானும் அவருடம்பில் எவ்வித வேற்றுமையும் தோன்றவில்லை. அதிகாலை யெழுந்து காலைக் கடன் முடித்துக் கொண்டு தமது ஆச்சிரமத்துக்குச் சென்று படுக்கையிற் படுத்ததுதான் தெரியும். அவ்வளவுதான். நாடோறும், 'உன்பாத தாமரைகளே தஞ்சம்' என்று வணங்கித் துதித்துத் தியானித்து வந்த வருத்தலை விநாயகப் பெருமானின் பாத நீழலை அவருடைய ஆன்மாவானது அடைந்து சாந்தி யெய்திற்று''. ஐயரவர்கள் ஈழத்துப் புலவர் சரித்திரத்தை எழுதிய போது அதனை போற்றிக் கூறிய பாடல்களுள் ஒன்று அவர் அமரநிலை எய்தியமையை நினைந்து ஏங்குதற்குரிய வகையில் பின்வருமாறு அமைந்துள்ளது.

''மருதடியில் விநாயகரின் மலரடியை
மனத்திருத்தி மறவா நின்றே
கருதறிய கல்வியின்பால் கழித்துவிட்டேன்
புலகாலம் கவலை யின்றிப்
பொருவரிய பேறெதுவும் போற்றுகிலேன்
எனப்பலகால் புகன்ற அண்ணல்
தெருளறிஞர் கணேசைய தேசிகனார்
தெய்வநிலை தெரிக்க லாமோ"

எண்பதாண்டு நிறைவு விழா மலராகத் தொகுத்தனை, ஐயரவர்களின் நினைவு மலராக வெளியிட நேர்ந்ததனை அறிந்த யாழ் நகர்ச் சான்றோர், ஐயர் மறைந்த வருத்தலை விளானில், சிறிய கோயில் ஒன்றினை நினைவுச் சின்னமாக அமைத்துப் போற்றி வருவது பாராட்டத்தக்கது. பொதுவாகத் தமிழ் வரலாற்று வானில், குறிப்பாக ஈழத்தமிழ் வரலாற்று வானில் மகாவித்துவான், வித்துவ சிரோமணி சி. கணேசையர் வாழ்வும் வாக்கும் நிலைத்துச் சுடரும் விண்மீனாகத் திகழும் என்பதில் ஐயமின்று.

குறளின் குரல்

பேரறிஞர் க. சின்னப்பா

ஒருவன் ஏழையாக இருக்கலாம்; அன்றிச் செல்வனாக இருக்கலாம். ஆனால் ஒருவன் மனிதனாக இருத்தல் வேண்டும், மனத்துக்கண் மாசற்றவனாக இருத்தல் வேண்டும். இன்பம் துய்த்தல் என்பது எல்லா உயிர்க்கும் பொது. மனிதனைப் பொறுத்த அளவில் எது அவனுக்கு இன்பம்? வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு வயோதிகன் நினைக்கின்றான் எது தனக்கு இனி இன்பம் நல்கும் என்று?

''எது எனக் கின்பம் நல்கும்?
இருக்கின்றாள் என்ப தொன்றே!
நினைக்கின்றாள், நினைக்கிறேன் நான்
நிலைக்கின்ற தென்பால் இன்பம்.
எனக்கென்ன இனி? அம்மூதாட்டி
உயிர்வாழ்வாள் ஆதலாற்றான்
உவப்பூட்டும் எனக்கிவ் வையம்

என்கிறார் பாரதிதாசனார்.

அவள்தான் வாழ்க்கைத் துணை. இன்பத்திலும் துன்பத்திலும் அவன் நலமொன்றே நாடியவள், அப்படி அமைந்தாளை 'வாழ்க்கைத் துணை நலம் என்பார் வள்ளுவர். பிசிராந்தையார் தமக்கு நரைதிரை இல்லாமைக்குக் கூறிய காரணங்களுள் நல்ல மனைவியும் ஒரு காரணமாகக் கூறுகிறார்.

ஒருவரது வாழ்க்கை மனைவியொடு மட்டும் நிறைவு பெற்றுவிடுகிறதா? திருமணம் நடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே உற்றாரும் உறவினரும் இன்னும் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லையே என்று மணமானவர்களை உசாவத் தொடங்கிவிடுகின்றனர். குழந்தையின் மழலை மொழிகளைக் கேட்கும் இன்பப் பேறு அவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பது அவர்களின் விருப்பம்.

"மழைகூட ஒருநாளில் தேனாகலாம்
மணல்கூட ஒருநாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
அம்மா என்றழைக்கின்ற சேயாகுமோ?

—என்று கவியரசர் கண்ணதாசன் பாடியுள்ளமை நினைந்து இன்புறத்தகும்.

அந்தக் குழந்தைக்குத் தாயோ தந்தையோ பாற்சோறு ஊட்டும் போது குழந்தையோ, ஊட்டியவர்களுக்கே ஊட்டிவிடும் கொள்ளையின்பத்தை என்னென்பது? அப்போது அந்தக் குழந்தையின் மலர்க்கரங்கள் தெரிந்தனவே தவிர, அந்தக் கைகளில் ஒட்டிய மண்ணும் மாசும் தெரிந்தனவா? அதனை நினைந்து ஒரு தமிழ் மன்னன்,

"குறுகுறு நடந்து சிறிகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழுநாளே"

என்று பாடி மகிழ்கிறான்.

வள்ளுவரும், "குழலினிது யாழினிது" என இரண்டு இசைக்கருவிகளை மட்டுமே குழந்தைகளின் மழலைச் சொல்லிற்கு உவமையாகக் கூறினார். குழலூதும் கண்ண பெருமானைப் போன்று ஓர் ஆண்மகவும் யாழ்மீட்டும் கலைமகளைப் போன்று ஒரு பெண்மகவும் போதும் என அவர் கருதினார் போலும்!

வெந்துயர் தீர்க்கும் வெண்ணீறு

பேரறிஞர் பெ. சுப்பிரமணியன்

முன்னுரை :

மனிதகுலம் உய்ய நம் முன்னோர் சமய நெறிகளை வகுத்தனர். ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்குரிய வழியை—வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை எய்தும் வழியைக் காட்டிய பல்வேறு சமய நெறிகளுள் சைவம் சிறப்புடைச் செந்நெறி. இதனைச் 'சைவத்தின் மேற் சமயம் இல்லை' என்றும், 'மேன்மைகொள் சைவ நீதி' என்றும் ஆன்றோர் போற்றியவாறு உணரலாம். சிவநெறி மனிதகுலத்தை மட்டுமன்றி உயிர்க்குலம் முழுவதையும் ஒன்றாகக் காணும் உயர்நெறி. ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்யும் இன்ப நெறி. ஆன்மநேய ஒருமைப்பாட்டையுணர்த்தும் ஒப்பற்ற நெறி. உயிர்கள் படிப்படியே உயர்ந்து ஆன்ம ஈடேற்றம் பெறுவது வீடுபேறு — சிவப்பேறு. ஆதலின் உயிர்களைப் பக்குவப்படுத்தவே நம் முன்னோர் கடவுள் திருவுருவங்கள், விடை, கொடி முதலிய சின்னங்கள், திருவெண்ணீறு, உருத்திராக்கம் முதலிய சாதனங்கள், திருக்கோயில்கள், சமய நெறிகள் ஆகியவற்றை வகுத்தனர். இவற்றை நாம் உய்யும் நெறிகளாகக் காட்டி இவற்றின் நடுநின்ற இறைவனையும் அவனது அளப்பரிய ஆற்றலையும் எங்கும் நிறைந்த நிலையினையும் வேதங்களும் ஆகமங்களும் உணர்த்தின. ஆயினும், இவ்வுண்மையினை உணராத மனிதரை அப்பரடிகள் 'பொறியிலீர்' என அழைத்து இரங்கும் நிலையை,

'குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே''

(திருமுறை-5, பா.889)

என்னும் தேவாரத்தால் அறியலாம்.

சிவவேடமும் சின்னங்களும்

சமயநெறியில் நின்றொழுகும் அன்பர் அவரவர்க்குரிய சின்னங்களை அணிந்து கொள்ள வேண்டும். சிவ சின்னங்கள்

சிவத்தை நினைக்கத் தூண்டுவனவாதலின் தவறாமல் அணிய வேண்டும் என்றனர் சான்றோர். திருக்கோயிலில் இருக்கும் மூர்த்தியில் சிவத்தைக் காண்பதிலும், சினவேடம் பூண்ட அடியாரிடத்தில் சிவத்தைக் காண்பதையே சிவஞானபோதம் முதலாவதாகக் கூறும்.

''செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே''

(சிவஞானபோதம். நூற்பா-12)

சிவ சின்னங்களில் வெண்ணீறும் உருத்திராக்கமும் முறையே சிவ, சத்தி வடிவமாகக் கொள்ளும் சிறப்புடையன. வேதங்களிலும் உபநிடதங்களிலும், திருமுறைப் பதிகங்களிலும் திருநீறு மிகச் சிறப்பாகப் போற்றப் பெற்றுள்ளது.

திருநீற்றின் வரலாறு

சிவபெருமான், அருட்சத்தியாகிய உமை தமக்குப் பத்தினியாகத் தோன்ற, பிரளய வெள்ளமே நீராகவும், அண்டங்களே மண்டபங்களாகவும், கடல்சூழ்ந்த பூவுலகமே வேதிகையாகவும் அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் அவியாகவும், ஏனைய உயிர்களே பசுக்களாகவும் கொண்டருளி, தமது நெற்றியாகிய குண்டத்தின்கண் உள்ள அக்கினிக் கண்ணினின்றும் தீயை மூட்டி யாகஞ் செய்தருளினர். அந்த யாகத்திலிருந்து தோன்றிய வெண்திருநீற்றை, அகப்புறப்பற்றுக்கள் அழியுமாறு விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களும் உடலில் அணியும்படி அமைத்தனர் என நூல்கள் கூறும்.

பெயர்க்காரணம்

திருநீற்றுக்கு விபூதி, நீறு, பசுமம் (பற்பம், புஸ்பம்) பசிதம், சாரம், இரட்சை எனப் பல பெயர்கள் உண்டு. வி—மேலான; பூதி—செல்வம். தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வமாகிய வீடு பேற்றினை வழங்குவது என்பதால் விபூதி எனப் பெயர் பெற்றது. விநாயகன் — தனக்கு மேலான தலைவன் இல்லாதவன் என்பதுபோல் தனக்கு மேலான செல்வம் இல்லாதது என விபூதி கருதப்படுகிறது. பாவங்களைச் சாம்பல் போல்

ஆக்குவதால் தமிழில் 'நீறு' எனவும் வடமொழியில் 'பஸ்பம்' எனவும் அழைக்கப்படும். உயிர்களின் அறியாமை அழியுமாறு சிவஞானமாகிய சிவத்துவத்தை விளக்கலாற் 'பசிதம்' எனப் படும். உயிர்களது மலத்தைக் கழுவுதலாற் 'சாரம்' எனப்படும். ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கிக் காத்தலால் 'இரட்சை' எனப்படும்.

"நீடலுறுந் தீவினையனைத்து நீற்றிவிட லானீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதியென்று முயிர்
தோறும்
கடு மலமாசினைக் கழுவுங் குணத்தாற் சாரமென்று மட
மோட வளர்சோதியைத் தரலாற் பசிதமென்று முரைப்
பாரால்"

என்னும் பேரூர்ப் புராணச் செய்யுள் இதன் பெயர்க் காரணம் கூறும்.

திருநீறு ஆக்கும் முறை

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை உலர்த் தித் தீயில் நீற்றி எடுக்கும் பொடியே திருநீறு. நீற்றினைப் புதுத்துணியால் வடிக்கட்டி நறுமலரிட்டுப் புதிய பாத்திரங்களில் வைத்து அணிய வேண்டும். மும்மலங்களாலும் கட்டப்பட்ட ஆன்மாக்களுக்கும் பசுவென்னும் பெயர் இருத்தல்போல ஆயராற் கட்டப்பட்டுப் பசுவென்னும் பெயரைக் கொண்டிருக்கும் உண்மை யாலும், பசுக்களின் மலம் நீறாக்கப்படுதல் போல, ஆன்மாக் களாகிய பசுக்களின் மலங்களுஞ் சிவஞானத்தீயால் அழிக்கப் படல் வேண்டும் என்பதும் இதனால் உணர்த்தப்படுகிறது.

திருநீற்றின் பயன்

பசுவின் சாணம் தீநாற்றத்தைப் போக்கும். கிருமிகளை அழிக்கும். அதுபோலவே திருநீறும் அணிந்தவர் உடலிலுள்ள தீநாற்றத்தை அகற்றும்; தலையிலுள்ள நீர்க்கோள் (ஜலதோஷம்) தலைவலி முதலியவற்றை நீக்குவதுடன் உடல்நல அடிப்படை யில் பல்வேறு மருத்துவப் பயன்களை நல்கும். ஒரு பொருள் பஸ்பமாக்கப்படும்போது அப்பொருள் ஆற்றல் (வீரியம்) அதிக மாகும் என்பது சித்த மருத்துவ உண்மை. மேலும் இத்திருநீறு யாவரும் "முடிவில் பிடிசாம்பராவர்" என்ற நிலையாமைத் தத்துவத்தை நமக்கு உணர்த்தி, "நீயும் நீறாவது உறுதி;

(சுடலை சேர்வது சொற் பிரமாணமே — அப்பர்) ஆதலால் உன் வாழ்க்கையில் தூய்மையைக் கடைப்பிடித்து சிவசிந்தனையுடன் செயல்படு" என்று நம்மைத் தெருட்டுகிறது. தூய வெண்ணீறு பூசுபவர்களின் உள்ளமும் தூய்மையாக இருத்தல் என்னும் பாவனையிற் பழகும் உண்மையையும் உணர்த்துகிறது. இவ் வுண்மை, அடியார் பெருமையைக் கூறும்

"மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்"

என்னும் பெரிய புராணப் பாடலால் விளங்கும். இத்திருநீறு உள்ளத்தைத் தூயதாக்கி, இறைவனை உளக் கோயிலில் எழுந் தருளச் செய்து அகப்பூசையில் வைத்து முடிவில் சிவபிரான் திருவடிப் பேற்றினையும் அடைவிக்கும்.

திருநீறு அணியும் முறை

காலை, மாலை வேளைகளில் நீராடிய பின் வழிபாட்டுக்கு முன்னும் உணவு வேளைகளின் முன்னும், கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ நின்று திருநீறு மண்ணில் சிந்தாதபடி வலக்கை நடுவிலுள்ள மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து நோக்கிச் 'சிவ சிவ' என்று சொல்லிச் சிவபெருமானைத் தியானித்துப் பூசுதல் வேண்டும். சமய தீக்கை முறைப்படி உரிய மந்திரங்களைச் சொல்லி அணிவது நல்லது. தலை, நெற்றி முதலாக முப்பத்திரண்டு இடங்களிலேனும், பதினாறு இடங்களிலேனும், எட்டு இடங்களிலேனும், ஐந்து இடங்களி லேனும் அணியலாம் என நூல்கள் கூறுகின்றன. அந்தந்த இடங்களில் அணியப்படும் திருநீற்றினால் அந்தந்த இடங்களுக் குரிய கருவிகளாற் செய்யப்படும் பாவங்கள் நீங்குமென்று பிருகச்சாபாலோபநிடதம் கூறுகின்றது.

திருநீற்றின் பெருமை

சைவத் திருமுறைகளில் திருநீற்றின் பெருமை பலவாறு போற்றப்பட்டுள்ளது. திருமூலர்,

"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்

தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே''

என்பர்.

திருஞானசம்பந்தர் திருஆலவாயில் பாண்டியனுடைய வெப்பு நோயைப் போக்கிப் பாடிய திருநீற்றுப் பதிகத்திலுள்ள,

''மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயன் திருநீறே''

என்னும் பாசுரம் திருநீற்றின் பெருமையைத் தெள்ளதின் விளக்கும். அப்பரடிகளும் சுந்தரரும் தத்தம் பதிகங்களில் இதன் சிறப்பினை விவரித்துள்ளமை காணலாம்.

மாணிக்கவாசகர்,

''பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே''

எனத் திருவாசகம், அச்சப்பத்தில் கூறியதும் பிறவிடங்களில் கூறியதும் திருநீற்றின் பெருமையைப் போற்றுவனவாகும். இவ்வாறு சைவ சாத்திரங்களிலும் தோத்திரங்களிலும் திருநீறு சிறப்புடன் போற்றப்படுகிறது.

முடிவுரை

வெந்துயர்ப் பிறவியை விலக்கும் பொருட்டு மந்திரமாகவும், மருந்தாகவும், பலவகையில் நமக்குப் பயன்படும் திருநீற்றினை அணிந்து, சிவபெருமான் திருவடிகளை நினைந்து, நம்மனத்துள் படிந்த மல அழுக்குகளைப் போக்கி, இறைவனை நம் இதய கமலத்துள் எழுந்தருளச் செய்து, அகப் பூசனையில் இறைவன் திருவடியைச் சிந்தித்து, மனத்தைப் பதித்துப் பழகி உயர்ந்து ஆன்மாவின் இலக்காகிய இறைவன் திருவடிப் பேற்றினை அடைவோம்.

''வெந்துயர் தீர்க்கும் வெண்ணீறு அணிந்து
அந்தமில் இன்பமாம் அரன்கழல் அடைவோம்!''

வள்ளலார் படைத்த திருமுகங்கள்

பேரறிஞர் தா. ஈசுவர பிள்ளை

சமயநெறியை மக்களிடையே பரப்பவும், அவர்களுக்கு இறைப்பற்றை ஊட்டவும் தோன்றிய சமயச் சான்றோர்கள், தம் நோக்கங்களைச் செயல்படுத்துவதற்குரிய கருவிகளுள் ஒன்றாக இலக்கியத்தையும் கையாண்டுள்ளனர். இவ்வகையில் தமிழ் அன்னையை அணி செய்யும் இலக்கிய வகைகள் பல உள சமயச் சான்றோர்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கும் இராம லிங்க அடிகளாரும் இறையுணர்வூட்டும் பாடல்கள், உரைநடை நூல்கள், வியாக்கியானங்கள், மருத்துவக் குறிப்புக்கள், உபதே சங்கள், திருமுகங்கள், அழைப்புக்கள், அறிவிப்புக்கள், கட்ட ளைகள் என்பனவற்றைப் படைத்து அளித்துள்ளார் அவற்றுள் இராமலிங்க அடிகளார் படைத்துள்ள திருமுகங்கள் மூலம் அறிய லாகும், அவருடைய இறைபற்றிய சிந்தனைகளையும், அரும் பண்புகளையும் இவண் காணலாம்.

வள்ளலார் படைத்த திருமுகங்கள்

சமுதாய நலம் விரும்பும் இலக்கியப் படைப்பாளர்கள் தம் உயரிய நோக்கங்களையும் உள்ளக்கிடக்கைகளையும் மக்களி டையே பதியச் செய்வதற்காகப் பல்வேறு வகையான இலக்கிய வகைகளைக் கையாளுகின்றனர். இவை இலக்கியப் படைப்பாளர் களின் கருத்துப் புலப்பாட்டுக் கருவிகளாக அமைகின்றன. இவற்றுள் ஒன்றே திருமுகம் ஆகும். தாம் கூறவிரும்பும் செய்தி யைக் கடித வடிவில் புலப்படுத்தும் நிலையில் திருமுகங்கள் அமைகின்றன. இராமலிங்க அடிகள் இறுக்கம் இரத்தின முதலி யாருக்கு 38 திருமுகங்களும், வேலு முதலியாருக்கு 7 திருமுகங் களும், பிற அன்பர்கட்கு 5 திருமுகங்களும் வரைந்துள்ளார். இத்திருமுகங்கள் வள்ளலாரின் இறைப்பற்றையும் போற்றற்கரிய பண்புகளையும் புலப்படுத்துவதுடன், அவற்றைக் கற்போர் உயரிய பண்புகளைப் பெற்றுச் சமுதாயத்தில் வாழ்வாங்கு வாழ வழிசெய்யும் நிலையிலும் அமைந்து காணப்படுகின்றன.

கல்வி அளிக்க வேண்டுதல்

வள்ளலார் இறுக்கம் இரத்தினமுதலியாருக்கு எழுதிய திருமுகங்களில் "சிரஞ்சீவி நமசிவாய பிள்ளையைக் கல்வி விஷயத்தில் அடிக்கடி விசாரிக்கவேண்டும்" என்றும் (திருமுகம் எண். 1) சிரஞ்சீவி குமாரசாமிக்குப் படிப்பும் முயற்சியும் ஊதியமும் உண்டாகின்றவகை எவ்வகை-அவ்வகை ஆராய்ந்து காட்ட வேண்டும்'' என்றும், "எந்த விதத்தில் படிப்பித்தால் படிப்பு வருமோ அந்த விதத்தில் படிப்பிக்கவேண்டும்" என்றும் (2) எழுதியுள்ளார். இவற்றால் பிறருக்குக் கல்வியாகிய ஈடில்லாத செல்வத்தை அளிப்பதில் வள்ளலார் பெருமானுக்கிருந்த அக்கறையும், கல்வியை மாணாக்கர்க்கு எவ்வாறு புகட்டவேண்டும் என்ற அவர் பரிந்துரைகளும் புலப்படுகின்றன.

நன்றியறிதலைப் புலப்படுத்தல்

இரத்தினமுதலியார் தமக்கு அனுப்பிய "லாங் கிளாத்" ஒன்றாக இருந்தாலும் அது ஒன்பது இலட்சங்களாகத் தோன்றுகின்றது என மற்றொரு திருமுகத்தில் குறிப்பிடுகின்றார். (6)

"தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையா
கொள்வர் பயன்தெரி வார்"

என்ற வள்ளுவர் வாக்கினை நினைவூட்டுகின்றது. மேலும் வேலு முதலியாருக்கு எழுதிய திருமுகத்தில் தாம் தற்போது உணவருந்தும் வீட்டின் உடைமையாளராகிய இராமகிருஷ்ணரெட்டியார் உடல் நலமின்றிக் காணப்படுவதால் இப்போது வரமுடியாது என்றும், வந்தால் உலகம் நிந்திப்பதோடு கடவுளுக்கும் சம்மதம் இருக்காது என்றும் குறிப்பிடுகின்றமை (42) வள்ளலாரின் நன்றி மறவா உள்ளத்தையும், உலகம் பழிக்கும் செயலில் ஈடுபட விரும்பாத உள்ளத்தையும், காட்டுகின்றது எனலாம்.

அடக்கமுடைமையைப் புலப்படுத்தல்

இன்னொரு திருமுகத்தில் (29) தம்மை இராமலிங்கசாமி என அழைப்பது தமக்கு இசைவு அன்று என்றும், இனி அவ்வாறு வழங்காமை வேண்டும் என்றும் வேண்டுதல் அவருடைய அடக்கமுடைமையைப் புலப்படுத்துவதுடன்,

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்கி இராமலிங்க அடிகளாரை உயர்நிலையில் வைத்து எண்ணவும் வைக்கின்றது.

அன்பு செய்வாரையே அடுத்தல்

இரத்தின முதலியாருக்கு எழுதிய திருமுகத்தில் "சோமுச் செட்டியாரைப் போல ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம்" என்றும் "சோமு செட்டியார் போன்றோர் இலட்சியம் வேண்டுவதில்லை; நாம் சிவபெருமான் திருவடிக்கே அடிமை ஆனோம்" என்றும் (6) குறிப்பிடுவதால் பணபலத்திற்கு அடிமையாகாத அன்பிற்கே அடிமையாகின்ற அடிகளாரின் உளப்பாங்கு புலப்படுகின்றது. 'மேலும், "யாமார்க்கும் குடியல்லோம்"' என்ற திருமுறைக் குரல் இவண் ஒலிக்கின்றமையையும் உணரமுடிகின்றது.

நட்பின் ஆழத்தைப் புலப்படுத்தல்

இரத்தினமுதலியாருக்கு எழுதிய திருமுகங்கள் அனைத்திலும் "கண் இமை போன்று விளங்கும் சிரஞ்சீவி" என்றே குறிப்பிடுகின்றமை அடிகளார் இரத்தினமுதலியார்பால் கொண்ட நட்பின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றது எனலாம். மேலும் இரத்தினமுதலியார்; தாம் உண்பது உடம்பில் பொருந்தாது, நிம்மதியின்றி இருப்பதாக எழுதுகின்றார் (23) இரத்தினமுதலியாரிடம் கடினமான அலுவல்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும் (23), தங்கள் உடல் நலம் குறித்துக் கடிதம் எழுதவில்லை என்றால் மனம் சஞ்சலித்துக் கொண்டேயிருக்கும் என்றும் (23), எந்தப் பிறப்பிலும் தங்களை விடமாட்டேன் என்றும் (26), தாயுள்ளத்துடன் எழுதுதல் அடிகளார் இரத்தின முதலியார்பால் கொண்ட நட்பின் இறுக்கத்தைக் காட்டுவதாய்க் கொள்ளலாம்.

இரக்கமுடைமை

பசித்து வந்தவருடைய பசியை நீக்க வேண்டும் என்றும் (30), கடிதம் கொண்டு வருகின்றவர் உடல் மெலிவுடையவராகையாலும் தம்மிடம் பணம் இல்லையாகையாலும் உதவி செய்ய வேண்டும் என்றும் (16), பிணிகளால் பிணிப்புண்ட ஏழைகளைக்

கருதும்போதெல்லாம் ஒரு சிறிது உளம்புடை பெயர்கின்றோம் என்றும் சுட்டுதல் அடிகளாரின் இரக்க உணர்வை வெளிப்படுத்துகின்றன.

வாழ்க்கை பற்றிய சிந்தனைகள்

வாழ்க்கை செம்மையாக அமைய வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டும் என்று அறிவுறுத்துகிறார் (6, 24, 39) பழமை பாராட்டலும், கண்ணோட்டம் செய்தலும், சுற்றந்தழுவுதலும் இல்வாழ்வார்க்கு இன்றியமையாதன என வலியுறுத்துகின்றார். (2) இறைவனை எண்ணுதற்கும், இறைத்தொண்டாற்றுவதற்கும் இல்வாழ்க்கை தடையாகாது என அழுத்தமாகக் கூறுகிறார் (4)

மருத்துவம் தொடர்பான சிந்தனைகள்

இருமலுக்குரிய மருந்துவகைகளையும், அவற்றைத் தயாரிக்கும் முறைகளையும், உண்ணும் முறைகளையும் விவரித்து எழுதுதல் அடிகளாரின் மருத்துவப் புலமையைப் பறை சாற்றுகின்றது (23) அருந்தல், பொருந்தல்களில் மித போசனம், மிதபோகம் ஆகியன் வற்றைக் கையாண்டு உடம்பை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் (13).

இறை தொடர்பான சிந்தனைகள்

பல்வேறு செய்திகளைத் திருமுகங்களில் தரும் இராமலிங்க அடிகள் தம் வாழ்க்கையின் அடிப்படை மூச்சாகிய இறைவன் பற்றிய சிந்தனைகளையும் ஆங்காங்கே தருகின்றார். சிவமே நமக்குப் பொருள் (3) தாய், தந்தை, குரு, தெய்வம், நண்பர், உற்றார் முதலியவர்களும் சிவத்தின் திருவுருவே (3) எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்தினால் இறைவன் திருவருள் நம்மை அடையும் (3). இடைவிடாது, நல்ல மனத்துடன் பஞ்சாச்சரத்தைத் தியானிக்க வேண்டும் (3) எந்தக் காலத்தில், எந்த இடத்தில், எந்தவிதமாக, எம்மட்டில், எதை அனுபவிக்க வேண்டுமோ அந்தக் காலத்தில், அந்த இடத்தில், அந்தவிதமாக அந்தமட்டில், அதைத் திருவருளால் அடையலாம் (4) எச்செயலையும் சிவப்பஞ்சாக்கரத்தை எப்போதும் கருத்திற்கொண்டே நடத்த வேண்டும் (11). சிவன் திருவடியும் பஞ்சாச்சரமும் அன்றி வேறு துணை இல்லை (13) சிவாயநம என்பார்க்கு அபாயம் ஒன்று இல்லை என்பதைச் சத்தியமாகக் கடைப்

பிடிக்கவேண்டும் (23) இறைவன் என்றும் நம் உள்ளிருந்து ஆட்டுவிக்கின்றான் (27). உயிர்த் துணைவன் நடராசப்பெருமான் (38). நம்மைப் பெற்ற தாயைவிடப் பலமடங்கு நம்மிடம் தயவுள்ளவன். நம் ஆண்டவன் (39) எனப் பல்வேறு இறைத் தொடர்பான சிந்தனைகளை வெளியிடுகின்றார்.

இவ்வாறு வள்ளலார் படைத்த திருமுகங்கள் மூலம் அவருடைய உயர்ந்த பண்புகளையும், பரந்த உள்ளக்கிடக்கையையும், கலையுணர்வையும் அறியமுடிகின்றது. இத்திருமுகங்களைப் படிப்போம். உள்ளத்திலும் அரும்பெரும் பண்புகள் தழைத்து, அவர்கள் நல்ல சமுதாய உறுப்பினர்களாக வாழ்வதற்கு வழிகோலும் தன்மையுடையனவாகவும் இவை திகழ்கின்றன. மேலும், இத்திருமுகங்கள் மூலம் வள்ளலார் போற்றற்கரிய கலைப்பற்று மிக்கவர் என்பதுடன் அவர் சிறந்த இலக்கியப் படைப்பாளர், சமூக நலன் விரும்பும் சீரிய சிந்தனையாளர், மருத்துவப் புலமை பெற்றவர், மனிதநேயம் மிக்கவர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

''நீர்வார் கண்ணார்''

வை. தங்கமணி

சங்ககால நூற்களைக் கீழ்க்கணக்கு என்றும் மேற்கணக்கு என்றும் பிரித்துக் கூறுவர். மேற்கணக்கைப் பத்து—எட்டு எனப் பிரிப்பர். எட்டுத் தொகை நூற்களுள் இரண்டாவதாக வைத்து எண்ணத்தக்க 'குறுந்தொகை' நூலில் பெயர் தெரியாத 256 ஆம் பாடல் :

''மணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகை
பிணிகான் மென்கொம்பு பிணையொடு மார்ந்த
மானே றுகளும் கானம் பிற்பட
வினைநலம் படீஇ வருது மவ்வரைத்
தாங்கல் ஒல்லுமோ பூங்குழை யோயெனச்
செல்லா முன்னர் நில்லா வாகி
நீர்விலங் கழுத லானா
தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே''

(பா.எண். 256)

கூற்று : தலைவன் கூற்று.

துறை : பொருள் விலக்கப்பட்ட தலைவன் செலவழுங்கியது. அஃதாவது, பொருள்வயிற்பிரிதலை விலக்கப்பட்ட தலைவன் செலவொழிந்தவழிக் கூறியது. பூத்தலை உடைய குழையை அணிந்த பெண்ணே, நீலமணியின் கதிர்கள் ஒழுகினாற் போன்ற கரிய கொடிகள் படர்ந்த அறுகம் புல்லினது பிணித்த வேர்களை உடைய மெல்லிய கிளையைத் தம் பெண் மான்களோடு வயிறு நிரம்ப மேய்ந்து ஆண் மான்கள் துள்ளித்திரியும் காடுகள் பின்னே கிடக்கும்படிச் சென்று யாம் தொழிலால் உண்டாகும் நலத்தைப் பெற்று மீண்டு வருவோம். அங்ஙனம் யாம் வருமளவும் உன்னால் பொறுத்துக் கொள்ள முடியுமா? என்று நம் கருத்தை அவட்குக் கூறுவதற்கு முன்பே, நம் தலைவியுடைய கண்கள், அவள் வரைத்தாய் நில்லாதனவாகி நீர்த்துளிகள் புறப்பட்டு ஒழுத தற்குக்காரணமான அழுதலை ஒழியாதனவாகி, நம் தேரினது செலவைத் தடுத்தனகாண்—என்றவாறு.

தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவானாய் பூங்குழை யோய், யாம் வினைமேல் சென்று வருவோம், யாம் வருந்துணை

யும் ஆற்றி இருத்தல் வல்லையோ? எனத் தலைவியை யாம் வினவவும் — அவள் நிலைகலங்கி அழலாயினாள். அவள் அழுத கண்கள் வினைமேற் செல்லுதற்குரிய நம் தேரின் செலவைத் தடுத்து நிறுத்தின. இனி யாம் செல்ல மாட்டோம் என்று கூறுகிறான்.

அறுகம் புல்லை வயிறு நிரம்ப மேய்ந்த ஆண்மான்கள் பெண் மான்களோடு துள்ளித் திரியும் காட்சியை உடைய காடு என்பதை 'பிணையொடு மார்ந்த மானேறுகளும் கானம்' என்று கூறுவார்.

காட்டில் ஆண்மானும் பெண் மானும் அறுகம் புல்லை வயிறு நிரம்ப உண்டு துள்ளித்திரியும் காட்சியைக் காணுதலால் தலைவன் பிரிவு அழுங்குதற்கு ஒரு காரணம் என்பது குறிப்பென்றும் கொள்ளலாம்.

வேற்றுப் புலம் சென்று, பொருள் ஈட்டுதலும், அறம் செய்தலும், துய்த்தலும் என்பது தோன்ற 'வினை நலம்' என்றார். வினை நலம் என்பது மேலே கூறிய செயல்களால் வரும் நன்மைகள்.

தனது பிரிவினைச் சிறிதும் அவள் பொறுத்துக் கொள்ள மாட்டாள் என்பதனை அறிவான். அவள் என்னைப் புல்லிக் கிடந்தாள். யான் அவள் அறியாது புடைபெயர்ந்தேன். அவ்வாறு புடைபெயர்ந்த அளவிலேயே அள்ளிக் கொள்வது போல 'பசப்பு' நிறைந்ததை அறிவான்.

"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு" (குறள். 1187)

ஆகையால் அவ்வளவில் தாங்கல் ஒல்லுமோ? எனக் கேட்டான் என்க.

வினை நலம் வேண்டி சின்னாள் பிரிய வேண்டும் என்று சொல்லி முடிக்கும் முன்பே நில்லாளாகி 'நீர்விலங் கழுதாள்' என்பதாம்.

இப்பாடலின் நடுவாக—கருவாக நிற்பது 'நீர்விலங் கழுதல்' (நீர்வார் கண்ணினார்) என்ற தொடரேயாகும்.

வாழ்வியல் சிறக்க — பொருளீட்டலும், அறம் செய்தலும், துய்த்தலும் வேண்டும் அன்றோ?, அதற்குப் பிரிதல் வேண்டும். அப்போதுதான் வாழ்வு வாழ்வாகும். இன்றேல் தாழ்வுற்று மறுமை மிஞ்சிக் கீழ்ப்படுவர். அதனால்தான் கானில் அறுகம்

புல்லை வயிரார மேய்ந்து துள்ளி விளையாடும் மானினத்தைக் கண்டும் பிரிவு தடைப்படும் என்பதும் உண்டு.

இங்குப் பிரிவேன் என்பதும் நீர்வார் கண்ணைக் கண்டான். சில மணித்துளி நேரம் பிரிந்தாலே 'அள்ளிக் கொள்வன்ன பசப்பு' என்பதையும் மறந்து அழுதாள். அதனால் வினை நலத்திற்கு வேண்டிய பிரிவு தடைப்பட்டது.

"உன் கண்ணில் நீர் வழிந்தால் — என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி"

— என்பார் பாரதியார். கண்ணீருக்கு அத்துணை ஆற்றல்.

வினைநலத்தால் எத்துணைச் செல்வம் இருப்பினும் கண்ணீர் அதனை அழித்துவிடும் என்பதனை வான்புகழ் வள்ளுவனாரும் :

"அல்லல்பட் டாற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

பிரிவேன் ஆற்றுமோ? என்றான். அவள் அழுதாள். பிரிவால் ஏற்படும் துன்பத்தைப் பல்லாற்றானும் அறிந்தவன். ஆகையால் பிரிதலைக் கைவிட்டான்.

பாட்டின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துவது அழுகை. அது வினைநலத்தை மடை — மாற்றம் செய்கிறது. ஆக பாடலில் முத்தாய்ப்பாய் அமைந்துள்ள தொடர் "நீர்—விலங்கறுத்தல்' என்பதாகும்.

இதனால். பூங்குழையோய்,வினை நலம் வேண்டிப் பிரிந்து வரும் வரை பொறுத்திடல் ஒல்லுமோ?' என்று சொல்லும் முன்னரே தெரிவை கண் அழுதது. அதனால் பிரிவு நின்றது' ஆகையால் இப்பாடல் எழுதியவருக்கு 'நீர்வார் கண்ணார்'. எனப்பெயர் தருதல் சாலப் பொருந்தும். புலவர் பெயர் ஏற்றதா? கண்ணீர் அத்துணை ஆற்றல் உடையதா? எண்ணிப் பாருங்கள்.'

ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளுக்கு ஒப்பு. துன்பப் பட்டு அழுத கண்ணீர் செல்வத்தை அழிக்கும் ஆயுதம். அசோக வனத்தில் இருந்த சீதை அழுத கண்ணீர் அரக்கர் குலத்தையே அழித்தது. துரியோதனன் அவையில் பாஞ்சாலி அழுத கண்ணீர் கௌரவர் குலக்தையே அழித்தது. கண்ணகி கணவனை இழந்து அழுத கண்ணீர் பாண்டியன் நெடுஞ்செழியனை அழித்தது.

ஆற்றல் மிக்கதுதான் — ஆகையால் (256) இப்பாடல் எழுதியவருக்கு 'நீர்வார் கண்ணார்" எனப்பெயர் சூட்டுவது சாலப்பொருத்தம் ஆல்லவா?

நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களும்- இளைஞர் இலக்கியமும்

ஜி, வசந்தா

முன்னுரை

நாட்டுப் புறப் பாடல்கள் என்பன மனிதன் என்று தோன்றினானோ அன்று தோன்றிய பாடல்கள் என்பர். வாய்மொழிப் பாடல்களாக, ஏட்டில் எழுதாக் கவிதைகளாக உலவி வளர்ந்த இலக்கியம் இன்று எழுத்தில் மிளிர்கின்றன.

நாட்டுப்புறப் பாடல்களில் பெரிதும் சிறப்புடையன தாலாட்டும் ஒப்பாரியுமாகும், அவற்றுள் தாலாட்டுப் பாடல்கள் சிறு குழந்தைகளுக்கு அவர்கள் அறியாப்பருவத்தில் பெற்றோராலும், பாட்டி, அத்தை போன்றோராலும் பாடப்படுவன. தாலாட்டுப் பாடல்களிலிருந்து சிறிது வளர்ந்த நிலையில் பாடப் படுவன சிறுவர் விளையாட்டுப் பாடல்கள்.

சிறுவர் பாடல்கள்

தாலாட்டுப் பாடல்களைத் தொட்டிலிலிருந்து கேட்டுப் பழகிய காரணத்தாலோ, என்னவோ, வளர்ந்த நிலையிலும் பாடல்களே குழந்தைகளைக் கவருகின்றன. உரைநடையாகவோ, வாய்மொழியாகவோ. கதையாகவோ சொல்வதை விட, புரிந்து கொள்ளக்கூடிய எளிய சொற்களால் பாடலாகப் பாடுவது என்பது குழந்தைகளுக்கு மிகப் பிடித்தமான ஒன்று. இன்றும் கிராமப்புறங்களில் மட்டுமன்றி நகர்ப் பகுதிகளிலும் ஒரு சிறுவன் அல்லது சிறுமி பாடினால் அதைத் தொடர்ந்து கூட்டாக மற்றச் சிறுவர்களும் சேர்ந்து மகிழ்ச்சியாகப்பாடி விளையாடு வதைக் காணலாம்.

குழந்தைப் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று குழந்தைதளே பாடுவது: மற்றொன்று குழந்தைகளுக்காகப் பிறர் பாடுவது. குழந்தைகளே பாடும் பாடல்களும் பலவகையின. ஆண் குழந்தைகள் பாடும் பாடல்கள், பெண் குழந்தைகள் பாடும் பாடல்கள், இருபாலாரும் இணைந்து பாடும் பாடல்கள் என்று மூவகையாகப் பிரிக்கலாம்.

"சிறுவர்களின் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்த பலர் பல பாடல்களைப் பாடி வைத்திருக்கின்றனர். அந்தப் பாடல்களைச் சிறுவர் பாடும்போது அவர்களுக்கு மட்டுமன்றி அருகிலிருந்து கேட்பவர்களுக்கும் அளவில்லாத ஆனந்தம் ஏற்படுகிறது" என்பார் அழ. வள்ளியப்பா. காரணம், இப்பாடல்களின் தன்மையே பாடுபவர்களையும் கேட்டபவர்களையும் மகிழவைப்பது தான்.

இளைஞர் இலக்கியம்

பாரதிதாசன் தம் கவிதைத் தொகுப்புகளில் ஆண், பெண் குழந்தைகளுக்கான தாலாட்டுப் பாடல்கள் பாடியிருக்கிறாரே அன்றி, அவற்றில் சிறுவர்களுக்கென அமைந்த பாடல்கள் இல்லை ஆனால், அவர் இயற்றிய 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்' என்ற நூலிலும், இசையமுது' இரண்டு தொகுதிகளிலும் 'இளைஞர் இலக்கியம்' என்ற நூலிலும் சிறுவர்களுக்காக இவர் பாடிய பாடல்கள் ஏறத்தாழ 150 எனலாம். இதன் மூலம் இவர் சிறுவர்பால் தமக்குள்ள ஈடுபாட்டைக் காட்டியதோடு அவர்கள் இப்பாடல்களைப் பாடி வளர்வதற்கு வழி காட்டியுள்ளார். பாவேந்தரின் 'இளைஞர் இலக்கியத்தில்' உள்ள பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் அமைப்பில் அமைந்துள்ளன. இப்பாடல்களை நாட்டுப்புறப்பாடல்களின் ஒரு கூறாக சிறுவர் பாடல்களோடு ஒப்பீட்டளவில் ஆய்ந்து பார்த்தால், இவற்றில் நாட்டுப்பாடல்களின் தாக்கத்தைக் காணலாம்.

குழந்தைப் பாடலில் பாடுபொருளுக்குத் தலைமை கொடுப்பதில்லை. எனவே அவர்கள் எதைப்பற்றி வேண்டுமானாலும் பாடுவார்கள். அவை விளையாட்டாகவும், வேடிக்கையாகவும் அமைகின்றன. பாவேந்தரின் நிலவுப்பாடல் நாட்டுப்புறப் பாடலான நிலா பாடலோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது!

"வட்ட நிலவே வாடாப் பூவே
சட்டி நிலாவே தாமரைப் பூவே
தொட்டிப் பாலே சோற்றுத் திரளே"

என்ற இப்பாடலை,

"எட்டி எட்டிப் பார்க்கும் வட்ட வட்ட நிலாவே
துள்ளித் துள்ளிச் சிரிக்கும் தும்பைப் பூ நிலாவே"

என்ற நாட்டுப்புறச் சிறுவர் பாடல் வடிவில் காணமுடிகிறது.